மாநகர சபை, யாழ்ப்பாணம்,

Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 11 சனிக்கிழமை (24.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 157

SATS TECH
யாழ்.நகரின் முன்னணி
Satellite & Cable TV நிறுவனம்
DIAL 021 222 5908

# முறிகண்டியில் கிளைமோர்த் தாக்குதல்

# சிறுவர்கள் உட்பட 16 பொதுமக்கள் பலி

## மூன்று சிறுவர்கள் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முறிகண்டி அக்கராயன் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் பெண்கள், சிறுவர்கள் உட்பட 16 பேர் உயிரிழந்துள்ளனர். ஆபத்தான நிலையில் மேலும் மூவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (10 ஆம் பக்கம் பார்க்க)



## பிரபாகரனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை வழக்குத் தொடர்பில் அனுப்பப்பட்டுள்ள அழைப்பாணையை உரிய வகையில் நடைமுறைப்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான், சார்ள்ஸ் மாஸ்டர் மற்றும் கோமதி மணிமேகலை ஆகியோர் உட்பட ஆறுபேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் சபையின்

## பிரதித் தலைமைப் பொறுப்பிலிருந்தும் இலங்கையை நீக்குவதற்கும் திட்டம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் உறுப்புரிமைக்கான வாக்கெடுப்பில் தோல்வியடைந்ததனைத் தொடர்ந்து மனித உரிமைகள் சபையின் பிரதித் தலைவர் பொறுப்பிலிருந்தும் இலங்கை நீக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற வாக்கெடுப்பில் மனித உரிமைகள் சபையில் உறுப்புரிமை பெறுவதற்கான தகுதியை இலங்கை இழந்துள்ளதனால் மனித உரிமைகள் சபையின் பிரதித் தலைவர் பொறுப்பிலிருந்தும் இலங்கை எதிர்வரும் மாதம் நீக்கப்படவுள்ளது.

ஜெனீவாவுக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் நேற்றுச் சரண்

உயிர் அச்சுறுத்தல் காரணமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று சரணடைந்துள்ளனர்.

மீசாலை மேற்கைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரே தனது குடும்பத்துடன் சரணடைந்துள்ளார். தாய், தந்தை, மூன்று ஆண் பிள்ளைகள் மற்றும் ஒரு பெண் பிள்ளை ஆகிய ஆறு பேருமே மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சரணடைந்துள்ளனர். (ஏ)

## விமானத் தாக்குதலில் இரு சிறுமிகள் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் கற்பாடுப் பகுதியில் கிபிர் விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் இரு சிறுமிகள் உடல் சிதறி பலியாகியுள்ளனர். சிறுவன் உட்பட 2 பேர் காயமடைந்துள்ளனர்.

கற்பாடு மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் கிபிர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன. இத்தாக்குதலில் அப்பகுதியில் இருந்த 10 வீடுகள் முற்றாக அழிந்தன. வீடுகளில் இருந்த 2 சிறுமிகள் கொல்லப்பட்டுள்ளனர். சிறுவன் உட்பட 2 பேர் காயமடைந்துள்ளனர்.

ரவிச்சந்திரன் விஜிதா (வயது 03) மற்றும் பாலச்சந்திரன் கயல்விழி (வயது 14) ஆகியோர் உயிரிழந்தவர்களாவர்.

ரவிச்சந்திரன் (10 ஆம் பக்கம் பார்க்க)

# பிள்ளையான் குழுவின் ஆயுதங்களை களைய இன்னும் அவகாசம் தேவை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

பிள்ளையான் குழுவின் ஆயுதங்களைக் களைய அரசு தயாராகவிருப்பதாகவும் ஆனால் அதற்கு சிறிய கால அவகாசம் தேவைப்படுவதாகவும் அரசு அறிவித்துள்ளது. வெளிவிவகார அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகமவே இதைத் தெரிவித்தார்.

அவர் இது குறித்து அங்கு மேலும் கூறியவை வருமாறு, கிழக்கு மக்களை புலிகளின் பிடியிலிருந்து மீட்ட அரசு அங்கு ஜனநாயகத்தை முழுமையாக நிலைநாட்டும் நோக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்தியது.

20 வருடங்களின் பின் நடத்தப்பட்ட இத்தேர்தல் மிகவும் அமைதியான முறையில் முடிபுற்றது. எந்தவொரு தடையுமில்லாது அம் மக்களால் தங்களது வாக்குகளைச் சுதந்திரமாக அளிக்க முடிந்தது.

வடக்குக் கிழக்கில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக அரசு பாடுபடுகின்றது என்பதை புலிகளுடனான (10 ஆம் பக்கம் பார்க்க)

## மல்லாவியில் கிளைமோர் இரு பொதுமக்கள் பலி

(மல்லாவி)

மல்லாவியில் அம்புலன்ஸ் வாகனம் மீது நேற்று முன்தினம் படையினரின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்தியகிளைமோர் தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் இருவர் கொல்லப்பட்டுள்ளனர் என கிளிநொச்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

வெள்ளாங்குளம்- (10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேற்று ஹர்த்தால்

(வவுனியா)

வன்னியில் மாரடைப்பால் மரணமடைந்த விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி பால்ராஜின் மறைவுக்கு துக்கம் அனுஷ்டிக்கும் வகையில் வவுனியாவில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஹர்த்தால் காரணமாக வவுனியா நகரில் நேற்று கடைகள், அலுவலகங்கள் என்பன திறக்கப்படவில்லை. பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களையும் வீதிகளில் காண முடியவில்லை. வாகன ஓட்டங்கள் இன்றி, மக்கள் நடமாட்டம் இன்றி நகர வீதிகள் வெறிச் சோடிக் காணப்பட்டன.

எனினும் இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்பு மற்றும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இராணுவத்திற்கு எதிரான பல்வேறு பெரும் தாக்குதல் நடவடிக்கைகளில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் நேற்று கிளைமோர் தாக்குதல்

(அம்பாறை)

அம்பாறை பக்மிட்டிய பகுதியில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்..

வீதிச் சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டிருந்த படையினரை (10 ஆம் பக்கம் பார்க்க)

# பால்ராஜின் மறைவுக்கு வை.கோ இரங்கல்

(சென்னை)

நிகரற்ற ரணகளச் சூரனாக மாவீரன் பிரிகேடியர் பால்ராஜ் திகழ்ந்தார் என்று தமிழ் நாட்டின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வை.கோ தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டின் சென்னையில் வைத்து வை.கோ நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஈழ விடுதலைப் புலிகளின் முதல் வரிசை தளகர்த்தாக்களுள் ஒருவரான பிரிகேடியர் பால்ராஜ் மறைந்தார் என்ற செய்தியை அறிந்த மாத்திரத்தில் ஒரு கணம் அதிர்ச்சியிலும் துக்கத்திலும் என்னுள்ளம் உறைந்தது.

மாவீரர் பால்ராஜ் என்ற பெயரை உச்சரித்தாலே களத்தில் நிற்கும் வேங்கைகளின் நரம்புகளில் மின்சாரம் பாயும்.

1989ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி இயக்கத்தின் முன்னணி தளபதிகளை என்னிடம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அறிமுகம் செய்து வைத்தபோது அவர்களுள் முக்கியமானவர் பிரிகேடியர் பால்ராஜ்.

குத்திக் கிழிக்கும் கூரிய முள் மரங்கள் அடர்ந்த காடுகளின் வழியாகச் செல்கையில் எந்த நேரத்திலும் இருநாட்டு இராணுவமும் தாக்குகின்ற அபாயத்தினூடே என்னைப் பாதுகாப்பாக அனுப்பி வைக்க வேண்டும் என்பதற்காக தேர்ந்தெடுத்து உடன் அனுப்பி வைத்த வீரர்களில் சிலர் அதன் பின் நடைபெற்ற சமர்களில் வீரமரணம் எய்தினர்.

முக்கிய தளபதிகள் பல சமர்களில் சாகச வெற்றிகளை குவித்துள்ளனர். மூன்று நாட்கள் தொடர்ந்து வன்னிக்காடுகளுடே நடக்கையில் கிளிநொச்சிக்குச் செல்லும் சாலையை நாங்கள் கடக்க நேருகையில் இராணுவத்தினர் அந்த வழி வருவதை அறிந்து அருகில் காட்டுக்குள்ளே நாங்கள் பதுங்க நேர்ந்தது. அப்போது பல மணிநேரம் பால்ராஜ் அவர்களுடன் உரையாடுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அவருடைய உடலில் குண்டுகள் பாயாத இடமே இல்லை. பலமுறை படுகாயமுற்று அதிலிருந்து மீண்டு களங்களில் படை நடத்தியுள்ளார். ஒவ்வொரு சண்டையிலும் அவருக்கு நேர்ந்த மயிர் கூச்செறியும் அனுபவங்களை அவர் சொல்லக் கேட்டு மெய்சிலிர்த்துப்போனேன்.

என் பாதுகாப்புக்காக உடன்வந்த புலிப் படைத் தம்பிகள், தளபதி பால்ராஜ் மீது கொண்டிருக்கும் பாசமிகு விசுவாசத்தையும் மதிப்பையும் அவர்கள் சொல்லச் சொல்லக் கேட்டு பிரமித்துப்போனேன்.

நிகரற்ற அந்த ரணகளச் சூரன் மறைந்து விட்டார். எந்தத் தாயக மண்ணின் விடுதலைக்காகப் போர்க்களத்தில் எதிரிகளை கதிகலங்கச் செய்தாரோ அந்த மண்ணில் இதோ அமைதியாக உறங்குகிறார்.

அவரது வீரமும் தியாகமும் தமிழீழ விடுதலை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு விட்டன என்றுள்ளது. (எ-1)

# குறிகாட்டுவான் இறங்குதுறையை அரச அதிபர் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

சேதமடைந்துள்ள குறிகாட்டுவான் இறங்குதுறையை யாழ்.அரச அதிபர் க.கணேஷ் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார்.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

திருவிழாவில் கலந்து கொள்வதற்காக பெருமளவிலான பக்தர்கள் குறிகாட்டுவான் இறங்கு துறையூடாகவே செல்ல முடியும்.

இந்நிலையில் சேதமடைந்துள்ள இறங்கு துறையை அரச அதிபர் பார்வையிட்டதுடன் அதனைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.



குறிகாட்டுவான் இறங்குதுறை சேதமடைந்துள்ளமையால் படகுகளை கரையொதுக்குவதற்கும் பயணிகள் பாதுகாப்பாக படகுகளில் ஏறுவதற்கும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டது. (சு)

# 'த நேசன்' ஆசிரியர் கடத்தப்பட்டு தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பில் இருந்து வெளிவரும் த நேசன் ஆங்கில வார ஏட்டின் பதில் ஆசிரியரும் பாதுகாப்பு நிலைவர எழுத்தாளருமான கீத் நொயார் நேற்று முன்தினம் கடத்திச் செல்லப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டு பின் விடுவிக்கப்பட்டார்.

தலையில் பலத்த காயங்களுடன் நேற்று அதிகாலை அவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

தெகிவளையில் உள்ள அவரது வீட்டிற்கு அண்மையில் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் அவர் கடத்தப்பட்டார்.

அவரது வாகனம் கைவிடப்பட்ட நிலையில் நின்றதை அவதானித்த அவரது மனைவி தனது கணவரைக் காணவில்லை என்று தெகிவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

அரச உயர் மட்டத்திற்கு இது குறித்து ஊடக அமைப்புக்களும் அழுத்தம் கொடுத்தன. இந்நிலையில் நேற்றுக் காலை தலையில் தாக்கப்பட்ட நிலையில் கீத் நொயார் அவரது வீட்டிற்கு அண்மையில் மயக்க நிலையில் வீழ்ந்து கிடந்தார்.

அவரை உடனடியாக கொழும்பு தேசிய மருத்துவமனையில் அவரது உறவினர்கள் அனுமதித்தனர்.

இத்தாக்குதல் குறித்து ஊடக அமைப்புக்கள் கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளன.

இதேவேளை த நேசன் பத்திரிகையின் பிரதி ஆசிரியர் கீத் நொயார் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கொள்ளுப்பிட்டியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

ஊடக அடக்கு முறைக்கு எதிரான அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த போராட்டத்திற்கு சுதந்திர ஊடக அமைப்பு உள்ளிட்ட ஐந்து ஊடக அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், அரசியல் தலைவர்கள் சிவில் செயற்பாட்டார்கள் மற்றும் தொழிற்சங்க செயற்பாட்டாளார்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (ச-5)

# பிலியந்தல குண்டு வெடிப்பு சந்தேக நபர்கள் விடுதலை

(கொழும்பு)

பிலியந்தல பயணிகள் பேருந்து நிலைய குண்டு வெடிப்பின் போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தவர்கள் பலர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குண்டுவெடிப்பின்போது காணாமல் போயிருந்ததாக கருதப்பட்ட உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளார்.

26 வயதான நாகேஸ்வரன் ஜயப்பிரபா என்பவர் சம்பவம் நடந்த தினத்தன்று தான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதாக தெரிவித்திருந்தார்.

இவர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட புதுக்கடை நீதிமன்றம் நேற்று முன்தினம் இவரை விடுதலை செய்துள்ளதாக பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்தின்போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 26 மலையக இளைஞர்கள் நேற்று முன்தினம் கஸ்பாவ நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)


## பொதுச் சுகாதார வெளிக்கள உதவியாளர் பயிற்சி நெறிக்கான ஆட்சேர்ப்பு - 2008

வடமாகாணத்திலுள்ள பொதுச் சுகாதார வெளிக்கள உதவியாளர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு மேற்படி பயிற்சி நெறிக்கு க.பொ.த உயர்தரம், விஞ்ஞானப்பிரிவில் சித்தி பெற்றிருப்பதுடன் க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். 18 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்பாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவுத் திகதி 25.06.2008.

இவை தொடர்பான மேலதிக விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையிலும், சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும் வடமாகாண சபையின் WWW.np.gov.lk இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், இல.572/3 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 25.06.2008ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் கடித இடதுபக்க மேல் உறையில் "பொதுச் சுகாதார வெளிக்கள உதவியாளர் பயிற்சி நெறிக்கான ஆட்சேர்ப்பு -2008" எனக் குறிப்பிடல் வேண்டும்.

**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**வடமாகாணம்.**

(C-1161)


# கிழக்கின் அமைதிக்கு பங்கம் ஏற்படக்கூடிய எந்தவொரு செயலுக்கும் இடமளிக்க முடியாது

## கிழக்கின் முதலமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கில் அமைதிக்கு பங்கம் ஏற்படும் வகையிலான எந்தவொரு செயற்பாட்டிற்கும் தாம் இடமளிக்கப் போவதில்லை என கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற கசப்பான சம்பவம் குறித்து தமது அதிருப்தியை தெரிவிப்பதாகவும் பொறுமையுடன் செயலாற்ற வேண்டும் எனவும் அவர் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வன்செயல்கள் தொடர்பாக முதலமைச்சர் பிள்ளையானும், மாகாண அமைச்சர் ஹிஸ்புல்லாவும் நேற்று காத்தான்குடியில் வைத்து மக்கள் மத்தியில் விசேட உரையாற்றியுள்ளனர்.

10ஆயிரத்துக்கும் அதிகமானோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டதாகத் தெரியவருகிறது. பயங்கரவாதத்தை இல்லாதொழித்து ஜனநாயக நீரோட்டத்தில் வெற்றிநடைபோட தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என முதலமைச்சர் பிள்ளையான் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியில் இடம்பெற்ற கசப்பான சம்பவங்களை மறந்து சமாதானமாக செயற்பட மக்கள் திடசங்கற்பம் பூண வேண்டும் என பிள்ளையான் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை வழமைபோன்று தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என மாகாண அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

வழமை போன்று நாளை முதல் கடைகள் திறக்கப்படவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (எ-5)

# அரசின் சுயலாப நோக்கே காத்தான்குடித் தாக்குதல்

## ஜே.வி.பி குற்றச்சாட்டு

காத்தான்குடி பிரதேசத்தில் 5 பேர் கொலை செய்யப்பட்ட முஸ்லிம்-தமிழ் இனவாத சர்ச்சைக்கு அரசாங்கத்தின் சுயலாப செயல்களே காரணம் என ஜே.வி.பி குற்றச்சாட்டியுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கமும் ஐக்கிய தேசியக் கட்சியும் கிழக்குத் தேர்தல்களில் வெற்றி பெறுவதனை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளும் இனவாத பிரசாரங்களின் பிரதிபலனை தற்போது அனுபவிக்க நேரிட்டுள்ளதாக ஜே.வி.பி சுட்டிக்காட்டுகின்றது.

இந்த இரண்டு பிரதான கட்சிகளும் முதலமைச்சர் வேட்பாளர் பெயரை அறிவிக்காது அதன் மூலம் இனரீதியாக மக்களிடமிருந்து ஆதரவைப் பெற்றுக் கொள்ள முயற்சிகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கின்றது.

குறுகியகால ஆட்சி அதிகார மோகம் காரணமாக விதைக்கப்பட்ட இனவாத வித்துக்கள் தேர்தலின் பின்னர் துளிர்விடுவதை அவர்களால் தடுக்க முடியாதுபோயுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து படையினர் கிழக்கை மீட்டெடுத்த பின்னர் பலவந்தமாக கிழக்கு வாழ் மக்களிடம் தேர்தலை அரசாங்கம் திணித்ததாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

மேலும் காத்தான்குடி சம்பவத்தினால் உயிரிழந்த ஐவரது குடும்பங்களுக்கும், சொத்து இழந்தோருக்கும் தமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளது. (ச-5)

## இன்று ஒரு தகவல்

# தர்மம்

ஒரு நாட்டின் ராஜா மாறுவேஷம் போட்டுக்கொண்டு நகர்வலம் வந்துகொண்டிருந்தார். இரவு நேரத்தில் ஒரு குதிரைமேல் ஏறி நாடுநகரமெல்லாம் எப்படியிருக்கிறது என்று சுற்றிப்பார்த்துக்கொண்டு வரும்போது, நகரத்துக்கு வெளியே ஒரு புளியமரத்தடியில் ஒருவன் பரிதாபமாக உட்கார்ந்திருந்தான்.

''ஏனப்பா , இந்த நேரத்தில் இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார் ராஜா.

''ஐயா நான் ஊருக்குள்ளே போக வேண்டும். என்னை கொஞ்சம் உங்களது குதிரைமீது ஏற்றிக்கொண்டுபோய் விட்டீர்களானால் மிகவும் உதவி யாக இருக்கும்! என் றான். சரி, ஏறிக்கொள்!'' என்றார் அவர்.

''என்னால் ஏற முடியாது. நீங்கள் தான் என்னைத் தூக்கி அங்கே உட்காரவைக்க வேண்டும். ஏனென்றால், நான் கை-கால் விளங்காதவன். என்னுடைய இரு கால்களுக்கும் உணர்ச்சியே கிடையாது. அதனால் தான் நடக்க முடியாமல் இங்கு இருக்கிறேன்'' என்றான்.

ராஜாவும் பரிதாபப்பட்டு கீழே இறங்கி அவனைத் தூக்கி குதிரைமேல் உட்காரவைத்தார். அவ்வளவுதான்... அவன் குதிரையை அடித்து விட்டிக்கொண்டு போய்விட்டான்.

ராஜா ஏமாந்துபோய்விட்டார். அவருக்கு அவமானமாகப் போனது. இருந்தாலும், ஒருவருக்கும் தெரியாமல் அரண்மனைக்குத் திரும்ப வந்துவிட்டார். நடந்த விஷயத்தை யாருக்கும் கூறவும் இல்லை. கொஞ்சநாள் கழித்து, அரண்மனையில் வழக்கு விசாரணைகள் நடந்துகொண்டிருந்தது. ராஜா ஒவ்வொருவருக்கும் தீர்ப்பு வழங்கிக்கொண் டிருந்தார்.

திடீரென ஒருவனைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். ''மன்னா... இவன் பல இடங்களில் கொள்ளையடித் திருக்கிறான். திருடியிருக்கிறான். நேற்று ஒரு வீட்டில் நுழைய முயன்ற போது காவலர்களிடம் பிடிபட்டான்'' என்றார் அமைச்சர்.

ராஜா நிமிர்ந்து பார்த்தார். தன்னை ஏமாற்றியவன் இவன் தான் என்பதை புரிந்துகொண்டார். அவனுக்கு இவரை அடையாளம் காணமுடியவில்லை. ஏனென்றால் அன்று ராஜா மாறுவேஷத்தில் அல்லவா இருந்தார். தீர்ப்பை நாளைக்கு என ஒத்திவைத்தார் ராஜா. அவன் சிறையில் அடைக்கப்பட்டான்.

அன்று நடுராத்திரி எல்லோரும் தூங்கியபின், ராஜா ரகசியமாக சிறைக்குப்போய் அவனைப் பார்த்தார். ''என்னை உனக்கு அடையாளம் தெரியுதா ?'' என்று கேட்டார். நீங் கள் தானே மகாராஜா உங்களைத் தெரியாதா? என் றான் அவன்.

உடனே ராஜா தனது அலங்காரங்களைக் கலைத்தார். இப்பொழுது அவனுக்கு ஞாபகம் வந்தது. ''மன்னா அன்றைக்கு குதிரையை உங்களிடமிருந்தா கடத்திக் கொண்டு போனேன்? என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்'' என்று காலில் விழுந்தான்.

''இதோபார்... எழுந்திரு... நான் சொல்வதைக் கேள்! நாளைக்கு நீ திருடமுயன்ற வழக்குக்காகத்தான் தண்டனை கொடுக்கப்போகிறேன். அன்றைக்கு ஏமாத்தியதற்கல்ல. அதுமட்டுமல்ல அன்று நான் ஏமாந்த விஷயத்தை ஒருவரிடமும் சொல்லிவிடாதே! அது நமக்குள்ளேயே இருக்கட்டும்!'' என்றார்.

இந்தக் கதையை ஒரு நண்பர் என்னிடம் சொல்லி விட்டு, ''அந்த ராஜா ஏன் அப்படி அவனிடம் சொன்னார்?'' என்று கேட்டார். ''ராஜாவே ஏமாந்துவிட்டார் என்றால் கேவலம் அல்லவா!'' என்றேன். நண்பரும் சிரித்து விட்டு அப்படித்தான் எல்லோரும் நினைக்கிறார்கள். ஆனால் காரணம் அதுவல்ல என்றார்.

''சரி நீங்களே சொல்லுங்கள்'' என்றேன். அதற்கு அவர் , அதாவது இந்தவிஷயம் வெளியே தெரிந்தால் உண்மையாக கஷ்டப்படுபவனுக்கு கைகொடுக்க எல்லோரும் தயங்குவார்கள். உண்மையாக கஷ்டப்படுவனைக் கூட இவன் ஏமாற்றுப் பேர்வழி என்று சந்தேகப் படுவார்கள். நாட்டில் தர்மம் கெட்டுவிடும். யாரும் உதவி செய்ய முன் வரமாட்டார்கள். இப்படி ஒரு நிலைமை நாட்டுக்கு வந்து விடக்கூடாது என்பதற்காகத் தான் ராஜா இப்படி செய் தார்.'' என்று விளக்கம் சொன்னார். இந்தக் கதையைக் கேட்டதும், ''இப்படியும் நடக்கலாம்'' என்றேன். "எப்படி?" என் றார் அவர்.

ஒருவன் குதிரையில் வந்து கொண்டிருந்தான். வழி யில் இன்னொருவன், "ஐயா... எனக்குகைகால்விளங் கவில்லை. எனக்குகொஞ்சம் லிப்ற் கொடுக்க முடியுமா? '' என்று கேட்டான். "வேண்டாம் நீ என்னை ஏமாற்றி விட்டு குதிரையை கடத்திக்கொண்டு போய்விடுவாய்!" என்றான் அவன். அதற்கு இவன் "எப்படி சரியாகச் சொல்கிறாய்?" என்று கேட்டான்.

''நானும் ஏற்கனவே ஒருவனை அதுமாதிரி ஏமாற்றிவிட்டுத் தான் இந்தக் குதிரையை தள்ளிக் கொண்டு வருகிறேன்!'' என்றான்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# மலிவான உணவுக்கான சகாப்தம் முடிந்துவிட்டது - ஐ.நா.தரவுகள் உறுதி

(கொழும்பு)

மலிவான உணவுக்கான சகாப்தம் முடிந்துவிட்டது என்று ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் புதிய தரவுகள் உறுதி செய்கின்றன.

குறைந்த வருமானத்தை உடைய நாடுகள் கடந்த வருடத்தில் தாம் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு செலவிட்ட தொகையைப் பார்க்கிலும், 40 வீதம் அதிகமாக இந்த வருடம் செலவிட நேரிடும் என்று உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் அறிக்கை கூறுகிறது.

உணவுப் பொருட்களின் தற்போதைய விலை அதிகரிப்பின் மோசமான நிலைமை முடிந்துவிட்டபோதிலும், தேவை அதிகரிப்பானது. உணவுப்பொருட்களின் ஒப்பீட்டளவிலான அதிக விலையை தொடர்ந்து பேணும் என்று உணவு மற்றும் விவசாய நிறுவனம் கூறுகிறது.

அதேவேளை, அதிக உணவு விலையானது, வறிய மக்களின் அடிப்படை மனித உரிமையை மீறு கிறது என்று, அது குறித்து ஆராய ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சபை ஜெனிவாவில் அவசரக் கூட்டம் ஒன்றை நடத்துகிறது. (அ-5)

## விண்ணப்பம் கோரல்

*விளைத்திறன் தடை தாண்டல் பரீட்சை.*

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஓகஸ்ட் மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் ஜூலை மாதம் 4ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம் , அமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டுப்பிரிவு, பெலவத்தை, பத்திரமுல்லை'' என்ற முக வரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

மேலதிக தகவல்களை மே மாதம் 23ஆம் திகதிய வர்த்த மானி யிலோ அன்றி வலம்புரிக்காரியாலயத் திலோ பார்வையிடலாம். (ஓ)

* * *

*பாடசாலை பற்சிகிச்சையாளர்.*

சுகாதார பராமரிப்புமற்றும்போஷணை அமைச்சு துணை மருத்துவ சேவையுள் பாடசாலை பற்சிகிச்சையாளர்பயிற்சியின் பொருட்டு பெண் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக தகைமையுள்ளவர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பங்கள் யூன் மாதம் 16 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "பணிப்பாளர் நிர்வாகம் 2,சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு, சுவசிபாய, இல 385, வண பத்தேகம விமல வன்ச தேரோ மாவத்தை , கொழும்பு 10 என்ற முகவரிக்கு அனுப் பப்படல் வேண்டும். மேலதிக தகவல்களை மே மாதம் 23ஆம் திகதிய வர்த்தமானியிலோ அன்றி வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிடலாம். (ஓ)

## இராசிபலன்

*24.05.2008*
*(வைகாசி 11, சனிக்கிழமை)*
*பூராடம் பிற்பகல் 01.04 மணிவரை*
*சதுர்த்தி பின்னிரவு 02.48 மணிவரை*
*இராகுகாலம் 08.52-10.22 மணிவரை*
*சுபநேரம்-02.52-04.22 மணிவரை*
*சங்கடஹர சதுர்த்தி*

| | |
|---|---|
| மேடம் | புதிய முயற்சி, கட்டுப்பாடு, போசன சுகம், பிரயாணம். |
| இடபம் | திடீர்நன்மை, முயற்சி தாமதம், திடீர்பயம், உடல்நலக்குறைவு. |
| மிதுனம் | களஸ்திர நன்மை, முயற்சி கைகூடும், விருந்துபசாரம். |
| கடகம் | நோய் குணமடைதல், காரிய சித்தி, தொழில் நன்மை. |
| சிங்கம் | புத்திரரால் கவலை, முயற்சி தாமதம், பணவிரயம், சகோதரர் உதவி. |
| கன்னி | சுபநிகழ்ச்சி, முயற்சி தாமதம், புதிய விடயம், தனவிரயம். |
| துலாம் | நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும், விருந்துபசாரம். |
| விருச்சிகம் | விவாதம், வேலைச்சுமை, சயன சுகம், பணவிரயம். |
| தனுசு | கற்பனை மிகுதி, புதிய முயற்சி, கீர்த்தி, தெய்வசிந்தை. |
| மகரம் | அமைதிக்குறைவு, காரிய அலைச்சல், சுபசெலவு, கடன்பிரச்சினை. |
| கும்பம் | முயற்சிபலிதம், பொருள் சேர்க்கை, பெரியோர் உதவி. |
| மீனம் | அதிகாரம், தொழில் நன்மை, காரிய சித்தி, தேகநலன். |

வளவன்.

# கட்டணத்தை அதிகரிக்க சிற்றூர்திச் சம்மேளனம் கோரிக்கை

(கொழும்பு)

லங்கா இந்திய நிறுவனம் டீசலின் விலையை 20 ரூபாவால் அதிகரித்துள்ளமையை அடுத்து சிற்றூர்திக்கட்டணங்களில் 25வீத அதிகரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை தனியார் சிற்றூர்தி உரிமையாளர்கள் சம்மேளன சங்கத்தின் தலைவர் ஸ்ரான்லி பெர்ணான்டோ இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளார். இதன் படி ஆகக் குறைந்த கட்டணம் 10 ரூபாவாக உயர்த்தப்பட வேண்டு மென அவர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இதே வேளை நேற்று நள்ளிரவில் இருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் டீசலின் விலையை அதிகரிக்குமானால் தமது சங்கம் போக்குவரத்துசேவையை விலக்கிக் கொள்ளுமென அவர் எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடை பெற்ற ஊடக சந்திப்பில் இந்த தகவல்களை அவர் வெளியிட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பான விசேட பேச்சு வார்த்தை ஒன்று போக்குவரத்து அமைச்சில் நேற்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-7)

## ஊழியர் சேமலாபநிதி அங்கத்தவர்கள் மீள் பதிவு; செயற்திட்டம் யாழ்.மாவட்டத்தில் ஆரம்பம்

ஊழியர் சேமலாபநிதி அங்கத்தவர்களை தேசிய அடையாள அட்டை இலக்கத்தின் கீழ் மீள்பதிவு செய்யும் செயற்றிட்டம் தற்பொழுது யாழ்.மாவட்ட தொழில் திணைக்களத் தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் ஆரம்ப கட்டமாக தொழில் தருநர்கள் தங்களுக்குரிய படிவங்களை மாவட்டத் தொழில் அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி, மீள ஒப்படைக்குமாறு யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் கே.கணேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தொழில் தருநர்களுக்கு ஐந்து விதமான படிவங்கள் வழங்கப்படுகின்றது.

* PR 1 படிவம்- ஊழியர் சேமலாப நிதி செலுத்தும் ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் ஒரு படிவம் வீதம் வழங்கப்படும்.

* PR 2 படிவம் - நிறுவனத்தின் ஊ.சே.நி.செலுத்தும் அங்கத்தவர்களின் பெயர்களில் வேறுபாடுகள் இருப்பின் இப்படிவம் பெற்று திருத்தம் செய்தல் வேண்டும்.

* PR 3 படிவம்- அங்கத்தவர்கள் முன்பு வேறு நிறுவனங்களில் வேலை செய்து, அங்கத்துவ இலக்கம் பெற்றிருப்பின் இப்படிவத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.


* PR4 படிவம்- ஒவ்வொரு தொழில் தருநரும் இப்படிவம் பூர்த்தி செய்தல் வேண்டும்.

* PR 5 படிவம் - நிறுவனத்தில் உள்ள ஊழியர்களின் விபரங்களைக் காட்டும் படிவத்தில் அங்கத்தவர்களின் ஒப்பம் பெறப்பட்டு, புதிய அங்கத்தவர்கள் இருப்பின் அவர்களின் பெயர்களும் சேர்க்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு தொழில் தருநரும் ஊ.சே.நி.செலுத்தும் ஊழியர்கள் ஒவ்வொருவரினதும் தேசிய அடையாளஅட்டை போட்டோ பிரதி PR1 படிவத்துடன் ஒப்படைக்க வேண்டும். கடந்த 5 வருடகாலத்தில் மரணமான அல்லது விலகிய ஊழியர்களின் விபரங்களும் தொழில் தருநரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படவேண்டும். எனவே தொழில் தருநர்கள் தமக்குரிய படிவங்களைப் பெற்று கூடியவிரைவில் சமர்ப்பிக்குமாறு தொழில் அலுவலகத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்நடவடிக்கையானது ஊழியர் சேமலாப நிதி மீளப் பெறுதலை இலகுவாக்குவதுடன், தொழில் மாற்றங்களால் ஏற்படும் பிரச்சினைகளை தவிர்த்துக்கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்ட பின்னர் தொழில் திணைக்களத்தால் வழங்கப்படும் தன்னியக்க அட்டைகள் மூலம் ஊழியர் சேமலாப நிதி பெற்றுக்கொள்ளமுடியும். (அ-4)



'நவோதயா' பாடசாலை வாரத்தினை முன்னிட்டு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற 'ஆக்கக் கண்காட்சியினை' அதிபர் கு.சிவானந்தம் மற்றும் ஆசிரியர்களும் மாணவர்களும் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

## கலைநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அமரர் தூ.போல் கஜேந்திரனின் 10ஆம் ஆண்டு ஞாபகார்த்தமாக தூயபோல் கலைக் கழகம் வழங்கும் கலைநிகழ்வுகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு கரந்தி சனசமூக நிலைய வெள்ளிவிழா அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை வே. தூயகுமாரனும், தலைமையுரையையும், சிறப்புரையையும் அருட்சகோதரன் வி.பி. தனேந்திராவும் வழங்கவுள்ளனர்.

அத்துடன் இசை நாடகம் மற்றும் பொது வான பாடல்களை கலைவேந்தன் ம.தைரிய நாதன், தை.ஜஸ்ரின், யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் நா.விமலநாதன் மற்றும் கொழும் புத்துறை சென்.ஜோசப் வித்தியாலய ஆசிரி யர் திருமதி ஹேமா தூயகுமாரனும் வழங்க வுள்ளனர். (அ-7)

## கோட்டத்துடன் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்விச் செயலாளரினால் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்கப் பட்ட அறிவுறுத்தலின் பேரில், வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நிகழ்ச்சித் திட்ட அலுவலராகக் கடமையாற்றிய சற்குணா னந்தம் பரணீதரன் யூன் மாதம் முதலாம் திகதி முதல் பருத்தித்துறை கோட்டக் கல்வி அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (ஓ-19)

## பருத்தித்துறையில் நடமாடும் ஊழியர் ஆய்வுச் சேவை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை யில் நடமாடும் ஊழியர் ஆய்வுச் சேவை எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை நடாத்தப்படவுள்ளதாக யாழ்.பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இங்கு கடமைபுரியும் அனைத்து ஊழியர் களினதும் சுயவிபரங்களைப் பரிசீலனை செய்து அவர்களது சுயவிபரக்கோவைகளில் இல்லாத அவசிய ஆவணங்களைத் திரட்டி சுயவிபரக் கோவைகளைப் பூர்த்தி செய்வதே இந் நடமாடும் ஊழியர் ஆய்வுச் சேவையின் நோக்கமாகும்.

இவ் ஆய்வுச்சேவை ஏனைய மாவட்ட வைத்தியசாலைகளிலும் மேற்கொள்ளப்பட வுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## பொதுக் கூட்டமும் நிர்வாகசபை தெரிவும்

(அல்வாய்)

உடுப்பிட்டி இமையாணன் பத்திரகாளி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் பொதுக் கூட்டம் கடந்த 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை இமையாணன் மேற்குக் கிராம அலுவலர் என்.மகேந்திரன் தலைமை யில் நடைபெற்ற பொழுது கீழ்வருவோர் நிர்வாகசபை உறுப் பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்-கொ.குணசிங்கம், உப தலை வர்-ச.நல்லையா,செயலாளர்-இ.ர்ஷியசீலன், உபசெயலாளர்-து.ஸ்ரீபாஸ்கரன், பொருளா ளர்-சி.செல்லத்துரை, கணக்காய்வாளர்-கி. இராஜதுரை

அத்துடன் 6 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஓ-19)

# விண்ணப்பங்கள் விரைவில் கிடைக்கப் பெற்றால் இருவாரங்களில் புத்தகங்கள் வழங்கப்படும்

## கல்வி வெளியீட்டு ஆணையாளர் புஷ்பகுமார

(யாழ்ப்பாணம்)

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் தத்தமது வலயங்களுக்குட்பட்ட பாடசாலைக ளில் 2008 ஆம் ஆண்டிற்கு குறைவாகக் கிடைக்கப்பெற்ற பாடநூல்கள் தொடர்பான விபரங்களை கோட்ட ரீதியாக அறிவிக்குமாறு கல்வி வெளியீட்டு ஆணையாளர் டபிள்யூ. எம்.என்.ஜே.புஷ்பகுமார கேட்டுள்ளார்.

கோட்டக்கல்வி காரியாலயங்களில் மேல திகமாக இருக்கும் பாடநூல்களை மற்றைய கோட்டக் கல்வி காரியாலயங்களின் தேவை யையறிந்து பகிர்ந்தளிப்பதற்கும்,

இவ்வாறாக பரிமாற்றப்பட்ட பின்னர் மேலும் தேவையான பாடநூல்களை மட்டும் சரியாக ஒழுங்கமைக்கப்பட்ட விண்ணப்பத்தில் குறிப் பிட்டு தொலைநகல் மூலம் மிக விரைவில் கிடைக்கச் செய்யுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பான சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வலய மட்டத்தில் மேலதிக பாடநூல்கள் இருக்குமாயின் வலயக் கல்விப் பணிப்பா ளரின் ஒத்துழைப்பின் கீழ் பாடநூல் பரிமாற் றங்களைச் செய்வதற்கு அதிகாரம் வழங்கப் பட்டிருப்பதோடு இதுதொடர்பாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும், கல்வி வெளியீட்டு ஆணையாளருக்கும் பிரதிகள் அனுப்பப்படுவது அவசியமாகும்.

தேசிய பாடசாலை மற்றும்2 ஆயிரம் மாண வர்களுக்கு மேல் கல்வி பயிலும் பாடசாலை களுக்கு பற்றாக்குறையான பாடநூல்களின் கோரல்களுக்கு ஏற்றவாறு கல்வி வெளியீட் டுத் திணைக்களத்தினால் வழங்கப்படுவதற்கு அதற்கான கோரல்கள் அடங்கிய விண்ணப் பங்களை பாடசாலை மட்டத்தில் தயார் செய்து அனுப்பப்படல் வேண்டும்.

இப் பாடநூல்கள் கிடைக்கப் பெற்றதும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மேற்பார் வைக்கு ஒருவரை நியமித்து விநியோகங் களை மேற்கொள்ளவேண்டுமென்றும், மேலதிக பாடநூல்கள் தொகை இருக்குமெனில் கோரல்கள் உள்ள வேறு கோட்டப் பாடசாலை களுக்கு வழங்குவதற்குமான அதிகாரம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்கப்பட் டுள்ளது.

பாடசாலைகளுக்கிடையில் பாடநூல் பரி மாற்றங்கள் தொடர்பான விபரங்கள் கல்வி வெளியீட்டு ஆணையாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதோடு அது தொடர்பாக சம்பவத் திரட்டு புத்தகத்தில் (Log book) பரிமாறப்பட்ட பாடசாலை, தொகை என்பன குறிப்பிடப்படல் வேண்டும் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

7ஆம், 11ஆம் தங்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியாத பாடநூல்கள் புதிய பாட சாலைகளின் விண்ணப்பங்களுக்கமைவாக மேலும் அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள தோடு இத் தொகை பாடநூல்கள் எதிர்வரும் இருவாரங்களுக்குள் கிடைக்கும் என்றும் கல்வி வெளியீட்டு ஆணையாளர் உறுதிய ளித்துள்ளார்.

அத்துடன் விண்ணப்பங்கள் வெகு விரை வில் கிடைக்கப் பெற்றால் தேவையான எண்ணிக்கையில் நூல்கள் தயார்செய்து அனுப்பிவைக்கப்படலாம் என்றும் தெரி வித்துள்ளார். (ஓ-19)




# பரீட்சை வழிகாட்டிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அரச சேவையின்.கனிஷ்ட ஊழியர்களை அரச முகாமை உதவியாளர் சேவை- வகுப்பு III இற்கு தரம் உயர்த்துவதற்கு நடாத்தப் படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றவுள்ள கனிஷ்ட உத்தியோகத்தர் களின் நன்மை கருதி வலி.தென் மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் கிராம பொறுப் பதிகாரி சந்திரமவுலியின் முயற்சியினால் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் ரி.தவசேகர் இலவசமாக முன்னோடிக் கருத்தரங்கினை நடாத்து வதற்கு முன்வந்துள்ளார்.

இந்தக் கருத்தரங்கு எதிர்வரும் 27,28, 29,30ஆம் திகதிகளில் தினமும் மாலை 2.30 முதல் 4.30 மணிவரை ஆனைக் கோட்டையில் அமைந்துள்ள வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் கிராம உப அலுவலகத்தில் நடைபெற உள் ளது.

பரீட்சைக்குத் தோற்றவுள்ளோர் பங்கு பற்றிப் பயனடையும் படி கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள். (ஓ)

## களியாட்ட நிகழ்வில் பாடசாலை மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட் டரங்கில் நேற்று முதல் நடைபெற்று வரும் வெசாக் தினத்தையொட்டிய களியாட்ட விழா வை பார்வையிடுவதற்கு நேற்றுக்காலை 8.30 மணியளவில் வடமராட்சி வலயத்தில் உள்ள வேலாயுதம் மகாவித்தியாலயம், மெத டிஸ்த பெண்கள் பாடசாலை, வட இந்து மகளிர் கல் லூரி ஆகிய பாடசாலைகளில் இருந்து மாண வர்கள் பஸ்களில் இலவசமாக அழைத்துச் செல்லப்பட்டனர். (ஓ-19)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிர மத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக. நிகழ்வு தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை 10 மணி பூசை முடிவுற்றதும் சாமணந்தரைப் பிள்ளையார் இந்து இளைஞர் மன்றத்தின் கூட்டுப் பிரார்த்தனை இடம்பெறும். (ஓ-35)

## மாணவ தலைவர்களுக்கான முகாமைத்துவ பயிற்சி

யாழ். ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலய மாணவ தலைவர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.00மணிக்கு பாடசாலை அதிபர் அ.அருணந்திசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது. இப்பயிற்சியினை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினர் நடாத்துவர். (ஓ)





யாழ்.கனரகத்தினம் மத்திய மகாவித்தியாலய நவோதயா வார சமய விழுமிய தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் வித்தியாலய அதிபர் வி.மாணிக்கம், சமயத்துறை பொறுப்பாசிரியர் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன், வித்தியாலய மாணவர்கள் ஆகியோரால் அழைத்து வரப்படுவதையும், ஆதீன முதல்வர் அருளுரை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## மணவாளக் கோலம்

வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீ மஹாகணபதிப்பிள்ளையார் திருக்கோவில் மணவாளக்கோல விழா 26 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 7.30 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி திரவ்யபிஷேகம், ஹோமம், சங்காபிஷேகம், திருவூஞ்சல், பஞ்சமுகர் திருவீதி உலா இடம்பெறும். (அ-6)

◆◆◆

(அல்வாய்)

உடுப்பிட்டி இமையாணன் பத்திரகாளி அம்பாள் ஆலய மணவாளக் கோலத் திரு விழா இம்மாதம் 31ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற உள்ளது. (ஓ-19)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சமூக அபிவிருத்தி மன்றத் தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு மன்ற காரியாலயத்தில் தலைவர் திருமதி ஜெபமணி ஜோசப்தலைமையில் ஆரம்பமாகும். இக் கூட்டத்தில் முக்கிய நிகழ்வாக சமூக அபிவி ருத்தி மன்றத்தினால் நடாத்தப்பட்ட தலையலங் காரம், மணப்பெண் அலங்காரம், முக ஒப்பனை வகுப்புக்களில் பங்குபற்றிய மாணவர்களுக் கான சான்றிதழ் வழங்கலும், மாணவர் களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். இந்நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி நா.ஜெயகௌரி பங்குபற்றி சிறப்பிப் பார். நிறுவனத்தின் அடுத்த பயிற்சி வகுப்பு யூன்மாதம் 16 ஆம்திகதி ஆரம்பமாகும். (ஓ)

## நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு

வடலியடைப்பு கனவாணி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 10ஆம் திகதி த. ஜெயராசா தலைமையில் நடைபெற்றது, இக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் தலைவராக சி.அருள்நேசராசா, உபதலைவராக க.தர்மராசா,செயலாளராக உ.துவாரகன், உபசெயலாளராக யோ.ராத வன், பொருளாளராக திருமதி ம.யோகராணி ஆகியோரும் மேலும் 13 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (அ-6)

## யோகாசன, தியான வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியில், புதிய யோகாசன தியான வகுப்புக்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை 6 மணிக்கு சமிதி மண்ட பத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இவ் வகுப்புகள் சனி ,ஞாயிறு ஆகிய இரு தினங்களில் காலை 6 மணி தொடக்கம் 7.30 மணி வரை நடை பெறும். இதில் ஆண், பெண் , சிறுவர் என சகல தரப்பினரும் கலந்துகொள்ளலாம் என ஸ்ரீ இராம கிருஷ்ண சமிதி மண்டப செயலாளர் அறிவித் துள்ளார். (அ-5)

## பனையிடைவெளி ஒப்படைக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூக வியல் சமூகத்தின் ஏற்பாட்டில் மனநல வைத் திய நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். சிவதாச னின் 'பனையிடைவெளி' எனும் ஒளிப்படக் கண்காட்சி நாளை ஞாயிற்றுகிழமை முதல் செவ்வாய்க்கிழமைவரை மூன்று நாட்கள் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட புதிய விரிவு ரை மண்டபத்தில் (1ம் மாடி) இடம்பெறும்.

சமூகவியல் சமூகத்தின் தலைவர் செல் வன் எஸ்.இதயதீபன் தலைமையில் நாளை காலை 9.30மணிக்கு இடம்பெறவுள்ள ஆரம்ப நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், கலைப்பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா, சமூகவியல் துறைத் தலைவர் பேராசிரியர் இரா.சிவசந்திரன் வாழ்த்துரையினையும், வைத்திய கலாநிதி சிவதாசன் ஒளிப்படமாக்கலின் பின்னணி பற்றிய உரையினையும்ஆற்றவுள்ளனர். துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முக லிங்கன் கண்காட்சியினை வைபவ ரீதியாக ஆரம்பித்துவைப்பார்.

பொதுமக்கள், பல்கலைக்கழக சமூகத்தி னர் மற்றும் ஆர்வலர்கள் இக் கண்காட்சி யைக் கண்டு பயன்பெற முடியுமென சமூக வியல் சமூகத்தினர் தெரிவிக்கின்றனர். (ஓ)

# இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் ரசிகர்களைக் கவர்ந்த அறுபது


கிரிக்கெற் ரசிகர்களை கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக கட்டிப் போட்டிருக்கும் ஐ.பி. எல். போட்டிகளில் அனைவரையும் கவர்ந்த 60 விடயங்களைப் பார்ப்போம்...



ஐ.பி. எல்., தொடரில் சதம் கடந்த முதல் வீரர் என்ற சாதனை படைத்தார் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் மக்கலம். இவர் இச் சாதனையை பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்கு எதிரான முதல் லீக் போட்டியில் செய்தார்.

''இருபது -20'' போட்டி வரலாற்றில் ஒரே போட்டியில் அதிக சிக்சர் கள் மற்றும் அதிக ஓட் டங்கள் எடுத்த வர் என்ற பெருமைக்கு சொந்தக் காரர் கொல்கத்தா அணியின் மக்கலம் தான். பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் இவர் 13 சிக்சர் உட்பட 158 ஓட்டங்கள் எடுத்தார்.

கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணிக்கு எதிரான "இருபது-20" போட்டியில் கலக்கமாக துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 240 ஓட்டங்கள் எடுத்து, ஐ.பி. எல்., தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்த அணி என்ற பெருமை பெற்றது. சர்வதேச நட்சத்திரங்கள் பங்கேற்ற தொடர் என்றாலும் போட்டி ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்படவில்லை.



கொல் கத்தா டெக்கான் அணிகள் மோதிய போட்டியின் போது திடீரென மைதானத்தில் இருந்த விளக்குகள் அணைந்து போயின.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் அதிரடி மன்னன் ஹைடன் 46 பந்துகளில் 81 ஓட்டங்கள் அடித்து மும்பை இந்தியன்ஸ் அணியை தோற்கடிக்க காரணமாக இருந்தார். சென்னை அணியின் சுரேஷ் ரெய்னா 37 பந்துகளில் 53 ஓட்டங்கள் குவித்து அரைசதம் கடந்தார்.

டெக்கான் சார்ஸர்ஜஸ் எதிரான போட்டியில் ராஜன்தான் றோயல்ஸ் வெற்றி பெற்றது. டெக்கான் அணியின் சைமண்ட்ஸ் 53 பந்துகளில் 117 ஓட்டங்கள் அடித்து அசத்தினார். இருப்பினும், சைமண்ட்ஸ் குவித்த அதிரடி சதம் வெற்றிக்கு கைகொடுக்காத காரணத்தால், டெக்கான் அணி பரிதாபமாக தோல்வியை தழுவியது.

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் டெக்கான் சார்ஜர்ஸ் வீரர்கள் கில்கிறிஸ்டும் லக்ஸ்மனும் முதல் விக்கெற்றுக்கு 155 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக் காமல் இருந்தனர். இதன் மூலம் ஐ.பி.எல்., தொடரில் முதல் விக்கெற்றுக்கு அதிக ஓட்டங்கள் சேர்த்த ஜோடி என்ற பெருமையை பெற்றனர்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் நான் காவது விக்கெற்றுக்கு ஜோடி சேர்ந்த மும்பை இந்தியன்ஸ் வீரர்கள் பிராவோ உத்தப்பா அபாரமாக விளையாடி 113 ஓட்டங்கள் சேர்த்தனர். இதுவே ஐ. பி.எல். தொடரில் 4ஆவது விக்கெற்றுக்கு எடுக்கப் பட்ட அதிகபட்ச ஓட்டங்களாகும்.

கொல்கத்தா மற்றும் ராஜஸ் தான் அணி களுக்கிடையிலான போட்டியில் கங்குலி மற்றும் வோர்ன் இடையே சர்ச்சை வெடித்தது. கங்குலி அடித்த பந்தை சிமித் பிடித்த போது நடுவர் ஆட்டமிழப்புக் கொடுத்தார் ஆனால் கங்குலி வெளியேறாமல் மூன்றாம் நடுவரிடம் கேட்கும்படி நடுவரிடம் முறையிட்டார். அதன்படி மூன்றாவது நடுவரிடம் முறையிடப்பட்டு ஆட்ட மிழப்பு இல்லை என்று அறிவிக்கப்பட்டது. இதற்கு வோர்ன் கடும் கண்டனம் எழுப்பினார். அத்து டன் அந்த போட்டியில் கங்குலி தேவையில்லாமல் நேரத்தை வீணடித்ததாகவும் வோர்ன் குற்றம் சாட்டினார். கங்குலியும் இதற்கு பதிலடி கொடுக்க பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

ராஜஸ்தானுக்கு எதிரான போட்டியில் எட்டாவது விக்கெற்றுக்கு ஜோடி சேர்ந்த பெங்களூர் அணி வீரர்கள் பிரவீணும் சகிர்கானும் 41 ஓட்டங்கள் சேர்த்தனர். இதுவே ஐ.பி.எல். போட்டிகளில் எட்டாவது விக்கெற்றுக்கு எடுக்கப்பட்ட அதிகபட்ச ஓட்டங்களா கும். இந்த சாதனையை மும்பை அணிக்கெதிரான போட்டியில் கொல் கத்தா அணியின் சுக்லா, முரளி கார்த்திக் ஜோடி சமன் செய்தது.

பஞ்சாப் அணிக்கெதிரான போட்டியில் கொல்கத்தா வீரர்கள் டேவிட் ஹசியும், சாகாவும் 6ஆவது விக்கெற்றுக்கு ஜோடி சேர்ந்து 104 ஓட்டங்கள் குவித்தனர்.



இதன் மூலம் 6ஆவது விக்கெற்றுக்கு அதிக ஓட்டங்கள் சேர்த்து வீரர் என்ற பெருமையை இவர்கள் பெற்றனர்.

சென்னை அணிக்கு எதிரான போட்டியில் ராஜஸ்தான் வீரர் சொகைல் தன்வீர் 14 ஓட்டங்கள் கொடுத்து 6 விக்கெற்றுகளை வீழ்த்தி மிரட்டினார். இதன் மூலம் ஐ.பி.எல்., தொடரில் ஒரே இன்னிங்சில் அதிக விக்கெற் வீழ்த்திய வீரர் என்ற பெருமையை தான்வீர் பெற்றார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் இடம் பெற்றிருந்த அவுஸ்தி ரேலிய வீரர்கள் ஹைடன், மைக்கல் ஹசி நாடு திரும்பியதன் எதிரொலியாக சரிவை சந்தித்த சென்னை தொடர்ச்சியாக மூன்றாவது தோல்விய டைந்து ''ஹட்ரிக்'' வீழ்ச்சி கண்டது.

மும்பை இந்தியன்ஸ், கிங்ஸ், லெவின் பஞ்சாப் அணிகளிற் கிடை யிலான போட்டியில் பஞ்ஜாப் அணி வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் அவ் அணியின் வீரர் சிறிசாந்த் மும்பை அணித் தலைவர் ஹர்பஜன்சிங்கை கிண்டல் செய்ய



ஹர்பஜன்சிங் சிறிசாந்தின் கன்னத் தில் அறைந்தார். இதனால் அதிர்ச்சியடைந்த சிறி சாந்த் மைதானத்தில் தேம்பி அழுதார். இவ்விவகாரம் காரணமாக ஹர்பஜன் சிங்கிற்கு ஐ.பி. எல். தொடரில் விளையாட தடைவிதிக்கப்பட்டது.

சச்சின் காயம் காரணமாக இடம் பெறாததால் பொலக் தலைமை யிலான மும்பை அணி, தொடர்ந்து 5 வெற்றிகளை குவித்த ராஜஸ் தான் அணியை 7 விக்கெற் வித்தியாசத் தில் வீழ்த்தி ''ஹட்ரிக்'' வெற்றியை பதிவு செய்தது.

சென்னையை எதிர்த்து ஆடிய போட்டியில் டில்லியின் காம்பீர் 49 பந்துகளில் 80 ஓட்டங்கள் குவித்தார். இதன் மூலம் தொடரில் அதிக ஓட்டங் கள் (305) எடுத்த வீரர் என்ற சாதனை புரிந்து ஒரேஞ் தொப்பி கௌரவத்தைப் பெற்றார்.

டெக்கான் சார்ஜர்ஸ் அணிக் கெதிரான போட்டியில் எட்டு விக்கெற் வித்தியாசத்தில் வெற்றிபெற்று ராஜஸ் தான் றோயல்ஸ் அணி புள்ளிப் பட்டியலில் முதலிடத்தை பிடித்து அசத்தியது. டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் முதல் 6 ஓவர்களில் ராஜஸ் தான் றோயல்ஸ் அணி 21 ஓட்டங்கள் எடுத்தது.

ஐ.பி.எல்., தொடரில் முதல் ஆறு ஓவர்களில் எடுக்கப்பட்ட குறைந்த பட்ச ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். சென்னையில் நடந்த கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணிக்கெதிரான இரண்டாவது லீக் போட்டியிலும் தோனி அணி வெற்றிபெற்றது.



போர்ம் பிரச்சினையால் நீண்ட ஓய்வில் இருந்த சென்னை வீரர் பாலாஜி ஐ.பி.எல். தொடரில் முதல் ஹட்ரிக் எடுத்து சாதனை படைத்தார். 24 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெற் வீழ்த்தி ஆட்ட நாயகனாக ஜொலித்தார். இவரது அனல் பறந்த பந்து வீச்சில் சென்னை சுப்பர் கிங்ஸ் 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

## ஒரே பார்வையில்

கொல்கத்தா அணியின் தலைவர் கங்குலி ஐ.பி.எல்., தொடரில் தனது அதிகபட்ச ஓட்டங்களை எடுத்தார். டெக்கான் சார்ஜர்ஸ் அணிக் கெதிராக 57 பந்துகளை சந்தித்து 11 பௌண்டரி, 5 சிக்சர்கள் உட்பட 91 ஓட்டங்களை குவித்தார். இறுதியில் கொல்கத்தா நைட் ரை டர்ஸ் அணி 23 ஓட்டங்கள் வித்தி யாசத்தில் வெற்றிபெற்றது.

டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்து வீசாமல் இரண்டு ஓவர் குறைவாக கங்குலி அணி வீசியிருந்தது. இதனால் போட்டி நடுவர் தலாத் அலி கொல்கத்தா அணியின் தலைவர் கங்குலிக்கு 40 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தார்.



கொல்கத்தா அணி ராஜஸ்தானுடன் மோதிய போட்டியில் டிடிச் தொடர் பாக கங் குலிகேள்வி எழுப்பினார். இது பின்னர் சர்ச்சை ஆனது. இப் போது டில்லி அணித்தலைவர் வோட் சன் ரன்-அவுட் பற்றி மூன்றாவது நடுவரிடம் முறையிடுமாறு கேட்டு மற்றொரு சர்ச்சைக்கு வித்திட்டார். இரு நிகழ்வுகளும் ராஜஸ் தான் அணியுடன் நடந்தது குறிப்பிடத் தக்கது.

ஐ.பி.எல்.தொடரில் அதிவேக சதம் அடித்த வீரர் என்ற பெருமையை டெக்கான் சார்ஜர்ஸ் வீரர் கில்கிறிஸ்ட் பெற்றார். மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 42 பந்துகளில் சதமடித்து இந்த சாதனையை படைத்தார் கில்கிறிஸ்ட்.


டில்லி அணியுடன் நடந்த முதல் போட்டியில் கொல்கத்தா அணி அக்தரின் அமர்க்களமான பந்துவீச்சு கைகொடுக்க 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சேவாக் அணியை வீழ்த்தியது. நீண்ட இடைவெளி மற்றும் பல தடைகளுக்கு பிறகு களமிறங்கிய அக்தர், சுலப இலக்கை பதிலளித் தாடிய டில்லி அணிக்கு அதிர்ச்சி தந்து ஆச்சரியமூட்டினார். இவர் 4 விக்கெற் வீழ்த்தி அசத்த, கொல்கத்தா நைட் ரைடர்ஸ் எளிதாக வெற்றி பெற்றது.

மும்பையில் நடந்த 36ஆவது லீக் போட்டியில் மும்பைக்கு எதிராக சென்னை வீரர் பத்ரிநாத் அபாரமாக ஆடி 33 பந்துகளில் அரைசதம் (53) கடந்தார். டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் டில்லி டேர்டே வல்ஸ் வீரர் மிஸ்ரா ஹட்ரிக் விக்கெற் வீழ்த்தி அணிக்கு வெற்றி தேடித்தந்தார்.

38ஆவதுலீக்போட்டியில்மும்பைக்கு எதிராக கொல்கத்தா அணி படுமந்தமாக ஆடியது. இந்த அணி 11.5 ஓவர்களில் தான் 50 ஓட்டங் களையேஎட்டியது. ஜெய்ப்பூரில் நடந்த 39ஆவது லீக் போட்டியில் பெங்களூர் அணியை வீழ்த்தி 16 புள்ளிகளுடன் ராஜஸ்தான் அணி அரையிறுதிக்குள் நுழைந்து அசத்தியது.

டில்லியில் நடந்த 40ஆவது லீக் போட்டியில் சேவாக் யுவராஜ் அணிகள் மோதின மழை குறுக்கிட்டதால் 11 ஓவர் போட்டியாக மாற்றி அறிவிக்கப் பட்டது. இதில் பஞ்சாப் வென்றது.

சென்னை அணிக்கு எதிரான போட்டியில் மும்பை வீரர் ஜெய சூர்யா 45 பந்துகளில் சதமடித்து ஐ.பி. எல்., தொட ரில் இரண்டாவது அதிவேக சதமடித்த வீரர் என்ற பெருமையை பெற்றார். ஐ.பி.எல். தொடரில் முதல் 7 போட்டிகளில் விளையாடத சச்சின் சென்னை அணிக்கு எதிரான போட்டியில் முதல் முறையாக களமிறங்கினார்.



இப் போட்டியில் 12 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமி ழந்தார்.

டெக் கான் சார் ஜ்ஸ் அணிக் கெதிராக டில்லி அணி வீரர்கள் காம்பீரும், தவா னும் இரண்டாவது விக்கெற்றுக்கு 133 ஓட்டங்கள் சேர்த்தனர். ஐ.பி.எல்.தொட ரில் இரண்டாவது விக்கெற்றுக்கு எடுக்கப்பட்ட அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். டெக்கான் அணிக் கெதிரான போட்டி யில் டக்-அவுட்டான சேவாக் மீது டில்லி ரசிகர்கள் கல்வீசி தாக்கியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் கொல்கத்தா அணி 67 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக் களையுமிழந்தது. ஐ.பி.எல். தொடரில் அணி ஒன் றினால் எடுக்கப்பட்ட மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். கொல்கத்தா வில் நடந்த 41ஆவது லீக் போட்டியில் சென்னை அணி, கொல் கத்தாவை வீழ்த்தியது. சென்னை அணியின் நிட்னி அபாரமாக பந்துவீசி ''ஹட்ரிக்'' விக்கெற் சாதனை படைத்து அசத்தினார்.

பெங்களூரில் நடந்த 43ஆவது லீக் போட்டியில் 19வயது வீரர் கோஸ்வாமி பெங்களூர் அணியில் அறிமுகம் செய்யப்பட்டார். அறிமுகம் செய்யப்பட்ட முதல் போட்டியிலேயே டில்லி அணிக்கு எதிராக அதிரடியாக ஆடி 42 பந்துகளில் அரைசதம் 52 கடந்து கலக்கினார்.



கொல்கத்தா ராஜஸ்தான் அணிகள் மோதிய 44 ஆவது லீக் போட்டியில் ராஜஸ்தான் அணி வீரர் யூசுப் பதான் அதிரடியாக ஆடி 18 பந்துகளில் 48 ஓட்டங்கள் குவித்து ரசிகர்களை வியக்க வைத்தார். ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் சென்னை அணிகளிடையிலான முதல் லீக் போட்டியில் தான் அதிகளவு ஓட்ட மழை பொழிந்துள்ளது. அந்த போட்டியில் இரண்டு அணிகளும் மொத்தம் 447 ஓட்டங்கள் எடுத்தன.

அதிக ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற அணி கொல்கத்தா அணி தான். பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் 140 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தொடரில் அதிக ஓட்டங்கள் அடித்துள்ள முதல் தர துடுப்பாட்ட வீரராக டில்லி அணியின் காம்பீர். 12போட்டிகளில் விளையாடி மொத்த 504 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

ஒரு இன்னிங்சில் பௌண்டரிகள் மூலம் அதிக திட்டங்கள் அடித்துள்ளவர் கொல்கத்தா அணியின் மக்கலம் பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் இவர் எடுத்த 158 ஓட்டங்களில் 118ஓட்டங்கள் பௌண்டரிகள் மூலம் பெற்றார். அதிக சரா சரீ ஓட்ட விகிதம் பெற்றுள்ளவர் பஞ்சாப் அணியின் கடிச். 2போட்டிகளில் விளையாடியுள்ள இவருடைய சரா சரி 96.

அதிக விக்கெட் வீழ்த்தியுள்ள சாதனை படைத்துள்ள பந்து வீச்சாளர் டெக்கான் அணியின் ஆர்.பி. சிங் இவர் மொத்தம் 15விக்கெற்று களை வீழ்த்தியுள்ளார். அதிகளவு உதிரி ஓட்டங்கள் விட்டுக்கொடுத்த அணி கொல் கத்தா. டெக்கான் அணிக்கு எதிரான போட்டியில் மொத்தம் 28 உதிரி ஓட்டங்களை வாரி வழங்கி யுள்ளது.

அதிக அரைசதம் கடந்த வீரர் டில்லி அணி யின் காம்பீர். அவர் மொத்தம் 5அரை சதங்கள் கடந்துள்ளார். அதிக முறை டக் அவுட்டாகி சாதனை படைத் தவர்கள் ஓஜா, பொண்டிங், பிரவீண், டிராவிட், டேவிட்ஹசி, சேவாக். இவர்கள் அனை வரும் தலா இரண்டு முறை டக் அவுட் டாகியுள்ளனர்.

அதிக சிக்சர்கள் அடித்த சாத னைக்கு சொந்தக்காரர் மும்பை அணியின் ஜெய சூர்யா. மொத்தம் 22முறை எல்லைக் கோட்டுக்கு வெளியே பந்தை பறக்கவிட்டுள்ளார். ஒரே இன்னிங்சில் அதிகசிக்கர் அடித்தவர் கொல்கத்தா அணியின் மக்கலம்.

பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் அவர் 13சிக்சர்கள் அடித்தார். மிகவும் கஞ்சத்தனமான பந்து வீச்சாளர் டில்லி அணியின்தில் ஷான். இந்தத் தொடரில் அவர் சராசரி யாக ஓவருக்கு 3 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொ டுத்துள்ளார்.



ஒரே இன்னிங்சில் அதிகளவு ஓட்டங்களை எதிரணிக்கு வாரி வழங்கியுள்ள வள் எல் டெக்கான் அணியின் அர்.பி.சிங். கொல்கத்தா அணிக் கெதிரான போட்டியில் 4 ஓவர்களில் 59 ஓட்டங்களை தாராள மனதுடன் விட்டுக் கொடுத்தார். விக்கெற் காப்பாளர்களில் அதிக முறைவிக் கெட் வீழ்ச்சிக்கு காரணமாயிருந்துள்ளவர் கொல் கத்தா அணியின் சாகா. இவர் மொத் தம் 10முறை துடுப்பாட்ட வீரர்களை வெளியே அனுப்பியுள்ளார்.

ஒரே இன்னிங்சில் அதிக விக் கெட் வீழ்ச்சிக்கு காரணமான விக்கெட் காப்பாளர் மும்பை அணியின் டகா வாலே. ராஜஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் அவர் 4பேரை வெளி யேற்றினார். அதிக பிடி கொடுத்த வீரர்கள் ரோகித் சர்மா (டெக்கான்). உத்தப்பா (மும்பை), யுவராஜ் (பஞ்ஜாப்), ரெய்னா (சென்னை) இவர்கள் அனை வரும் தலா 7பிடி கொடுத்துள்ளனர். ஒரு இன்னிங்சில் அதிக கேட்ச் பிடித் தவர் மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் சச்சின். கொல்கத்தா அணிக்கு எதிரான போட்டியில் இவர் 4 பிடிகளை எடுத்துள்ளார்.

விக்கெட் இழப்பின்றி வென்றுள்ள ஒரே அணி டெக்கான் சார்ஜர்ஸ். மும்பை அணிக்கு எதிரான போட்டி யில் பத்து விக்கெட் வித்தியாசத்தில் அபாரமாக வென்றனர்.

**ஆர்.யூ.பாலமுருகன்**

ஒரு ஓட்டம் வித்தியாசத்தில் வென்றுள்ள ஒரே அணி பஞ்சாப் அணி. மும்பை அணிக்கு எதிரான போட்டியில் கடைசிப் பந்தில் ஒரு ஓட்டம் வித்தியாசத்தில் வென்றனர். ஐ.பி.எல் தொடரில் கொல்கத்தா மைதானத்தில் தான் ஒட்டம் எடுக்க திணறியுள்ளனர். இங்கு எடுக்கப்பட்ட அதிகபட்ச ஓட்டங்கள் 149 (கொல்கத்தா நைட் ரைடர்ஸ்) தான். தொடர் வெற்றியில் சாதித்துள்ள அணி மும்பை இந்தியன்ஸ். அந்த அணி தொடர்ந்து ஆறு போட்டிகளில் வென்றுள்ளது. ராஜஸ் தான் அணி தொடர்ந்து ஐந்து முறை வென்றுள்ளது.

# உலகத்துக்கு உணவுதரும் வகையில் பாகிஸ்தானை வளர்ப்பேன்-சர்தாரி

(இஸ்லாமாபாத்)

காஷ்மீரில் படைகளைக் குறைக்க வேண்டும். இந்திய பாக்., எல்லையில் பொருளாதார மண்டலம் அமைக்கவேண்டும் என பாகிஸ்தான் மக்கள் கட்சி வலியுறுத்தியுள்ளது.



அத்துமட்டும் அல்ல, இந்தியாவுக்கும், உலகத்திற்கும் உணவு தரும் வகையில் பாகிஸ்தானை வாளர்ப்பேன் என்று ஆசிப் அலி சர்தாரி கூறினார்.

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவரும் அந் நாட்டின் முன்னாள் பிரதமரான பெனாசீர் பூட்டோவின் கணவருமான ஆசிப் அலி சர்தாரி கூறியதாவது,

ஜம்மு -காஷ்மீரில் இராணுவத்தினரின் எண்ணிக்கையை இந்தியா குறைக்க வேண்டும்.

அதேநேரத்தில், எந்த அளவுக்கு இராணுவத்தினர் எண்ணிக்கை குறைக்கப் படுகிறதோ, அந்த அளவுக்கு துணை இரா ணுவப் படையினரையும், பொலிஸாரையும் நிறுத்திக் கொள்ளலாம்.

### இரு ஆண்டுகளில் வளர்ச்சி

பாகிஸ்தான் தார் பகுதியில் உள்ள நிலக்கரி வளத்தைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்து, அதை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யமுடியும்.

எங்களிடம் இயற்கை எரி வாயு, கச்சா எண்ணெய் வளம் இருக்கிறது. அதுமட்டும் அல்ல, நட்புறவு உள்ள முஸ்லிம் நாடுகளில் இருந்து எரிவாயுவை வாங்கி அதை இந்தியாவுக்கு விநியோகம் செய்ய முடியும்.

இரு ஆண்டுகளில் வளர்ச்சியை நிறைவேற்றிக் காட்டி விட்டு உங்களிடம் பேசுகிறேன். காஷ்மீரில் இராணுவம் இருப்பதால், இரு நாடுகள் இடையே இணக்கம் ஏற்படுவதை விட, பிளவுதான் அதிகரித்திருக்கிறது. அதேநேரத்தில், பலமான பொலிஸ் படை இருந்தால், பிரச்சினை வராது.

### இந்தியா- பாகிஸ்தானிடையே விசா இல்லாத பிரயாணம்

இந்தியா-பாகிஸ்தான் இடையே விசா இல்லாமல் மக்கள் வந்து செல்லும் வகையில், நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப் படுத்தவேண்டும். அதன்மூலம் தாராளமாக வந்து செல்லலாம். பிரிட்டனும், பிரான்சும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றன. ஜெர்மனி, பிரான்ஸ் இடையே தற்போதும் எல்லைப் பிரச்சினை உள்ளது.

அதனால், ஐரோப்பா ஒன்றாக இணையாமல் போய்விட்டதா? பிரான்சை ஜெர்மனி கைப்பற்றப்போகிறது என்று உங்களால் சொல்ல முடியுமா? அதுபோல பாகிஸ்தானை இந்தியா கையகப்படுத்திவிடும் என சொல்வது எல்லாம் ஏமாற்றும் பேச்சு அர்த்த மற்றது.

### ஏழ்மையை ஒழிப்போம்

பாகிஸ்தானில் உள்ள 18 கோடி மக்கள் தொடர்ந்து ஏழ்மையில் இருக்கமுடியாது. எங்களிடம் தண்ணீர் வசதி இருக்கிறது. பாசனம் செய்யப்படாத நிலவளம் இருக்கிறது. அதை வளப்படுத்திப் பயன்படுத்தினால், இந்தியா என்ன உலகிற்கே உணவளிக்க முடியும். ஆனால் இவற்றை அமுல்படுத்த ஒரு நடைமுறை தேவை இவ்வாறு சர்தாரி கூறினார்.(அ-5)

# சீனப் பூகம்ப இடிபாடுகளிலிருந்து 8நாட்களின் பின் இருவர் மீட்பு

(பீஜிங்)

சீனாவைத் துவம்சம் செய்த பயங்கரப் பூகம்பம் ஏற்பட்ட எட்டு நாட்களுக்குப் பின் இடிபாடு குவியலுக்குள் புதைந்து கிடந்த 60 வயது மூதாட்டியும் , இன்னொரு ஆணும் மீட்கப்பட்டுள்ளனர்.

சீனாவின் தென் பகுதியில் உள்ள சிசூவான் மாகாணத்தில் ஏற்பட்ட 7.9 ரிக்டர் அளவு பயங்கர பூகம்பம் பெரும்பாலான பகுதிகளை துவம்சம் செய்தது.

இதில் 50 ஆயிரம் பேர் பலியாகி இருப்பதாக கருதப்படுகிறது. இதுவரை40 ஆயிரம் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக அதிகார பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

25லட்சம் பேர் பூகம்ப இடிபாடுகளால் காயமடைந்துள்ளனர். மீட்பு பணிகளிலும் நிவாரணப்பணிகளிலும் ஒரு லட்சத்து 10 ஆயிரம் இராணுவ வீரர்கள், உதவியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

செங்குவில் கடை உதவியாளராக வேலை பார்த்து ஓய்வு பெற்ற 60 வயது மூதாட்டி 196 மணி நேரத்துக்கு பின் மீட்கப்பட்டுள்ளார். வாங்குவால்ங் என்று இந்தப் பெண் மலை மேல் இருக்கும் ஜியுங்பெங் கிராமத்தில் உள்ள கோவிலுக்கு சென்றிருந்த போது பூகம்பம் ஏற்பட்டு கோவில் கட்டடம் தரைமட்டமானது. பூகம்பத்தோடு மழையும் இடை விடாது பெய்தது. இந்த மழை நீரைக் குடித்து எட்டு நாள்கள் இடிபாடுகளுக்குள் தாக்குப் பிடித்துள்ளார் வாங்குங். இனி உயிர் பிழைப்போம் என்ற நம்பிக்கை இழந்து விட்ட நிலையில் எட்டு நாட்களுக்குப் பிறகு இடிபாடு மலைகளுக்கு இடையே சிக்கியிருந்த வாங்குவாங் மீட்கப்பட்டார். அவர் சிகிச்சைக்காக செங்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதே போல , யுவாஞ்சியாங் என்பவரும் 179 மணி நேரத்துக்கு பின்னர் வென்சுவான் கவுன்டியில் மீட்கப்பட்டார்.

பூகம்பம் துவ்ம்சம் செய்து எட்டு நாட்க ளுக்குப் பிறகும் இடிபாடுகளில் சிக்கியோர் மீட்கப்பட்டுள்ள அதிசயம் நடந்திருக்கிறது. வீடுகள் இழந்த மக்களுக்கு தங்க வசதியாக உடனடியாக 25 லட்சம் கூடாரங்கள் தேவை. அதை ஜுன் மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என்று சீனப் பிரதமர் வென் ஜியோபோ உத்தர விட்டிருக்கிறார்.

பூகம்ப நிவாரணப் பணிகளில் ஈடுபட்டவர்கள்யாராவது லஞ்சம் வாங்கினால் அவர்கள் மீது கடும் தண்டனை பாயும் என்று அச்சடித்த நோட்டீஸ் , அரசு சார்பில் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. (அ-5)

## உலக தரிசனம்

# அமெரிக்காவின் எதிர்பார்ப்பையும் மீறி, பாக். அரசு, தலிபான் தீவிரவாதிகளுடன் ஒப்பந்தம்

(பெஷாவர்)

பாகிஸ்தான் அரசு தலிபான் ஆதரவு தீவிரவாதிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு உள்ளது.

### தஞ்சம் புகுந்த தீவிரவாதிகள்

அமெரிக்கா மீது அல்கொய்தா தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து அவர்கள் பதுங்கியிருந்த ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதல் காரணமாக ஆட்சி பீடத்தில் இருந்து தலிபான்கள் தூக்கி எறியப்பட்டனர். இதனால் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவர்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து அண்டை நாடான பாகிஸ்தானுக்குள் தஞ்சம் புகுந்தனர். உஸ்பெக் , சவுதி அரேபியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அல்கொய்தா தீவிரவாதிகளும் அந்த நாட்டுக்குள் புகுந்தனர்.

இந்த நிலையில் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக நெருக்கடி நிலைகாலத்தில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினரை பழங்குடி இனமக்கள் வசிக்கும் பகுதிக்கு அதிபர் முஷாரப்அனுப்பினார் .கடந்த ஒக்ரோபர் மாதம் அங்கு அனுப்பப்பட்ட இராணுவ வீரர்கள் தீவிரவாதிகள் மீது கடும் தாக்குதல் நடத்தினார்கள். இதனால் பேச்சுவார்த்தை நடத்தி இராணுவத்தை திரும்பப்பெற வைக்க தீவிரவாதிகள் முன்வந்தனர்.

### 15 அம்ச ஒப்பந்தம்

இதற்கிடையில் பாகிஸ்தானில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று மக்கள் கட்சி கூட்டணி கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சி அமைத்தது. பிரதமர் கிலானி தீவிரவாதிகளுடன் மென்மையாக நடந்து கொள்ளும் போக்கை பின்பற்றி வருகிறார். வட மேற்கு எல்லைப்புற மாநிலத்திலும் மக்கள் கட்சியின் தோழமைக் கட்சி ஆட்சிக்கு வந்தது. அவாமி தேசிய கட்சி தலைமையில் கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது. இந்த மாநில அரசு , தலிபான் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தது.

தீவிரவாதிகளுடன் நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது. 15 அம்ச ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் கையெழுத்திட்டனர். இதில் மாநில அரசு அதிகாரிகள் குழுவும், உள்ளூர் தலிபான் பிரதிநிதிகளும் கையெழுத்திட்டனர்.

### இராணுவம் வாபஸ்

அதன் படி பழங்குடி இன மக்களின் பகுதியான ஸ்வாட் பிரதேசத்தில் இருந்து இராணுவத்தை படிப்படியாக திரும்பப் பெற்றுக்கொள்ளும் இஸ்லாமிய ஷரியத் சட்டம் அந்தப் பகுதியில் நடைமுறைப்படுத்தப் படும். இதற்குப்பதிலாக தீவிரவாதிகள் ஆயுதப் பயிற்சி முகாம்களை மூடவேண்டும். வெளிநாட்டு தீவிரவாதிகளை அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும். தற்கொலை தாக்குதல்களை கைவிட வேண்டும்.

### அமெரிக்கா எதிர்ப்பு

ஏற்கனவே முஷாரப்பின் இராணுவ ஆட்சிக் காலத்தில் இதுபோல ஒரு ஒப்பந்தம் தீவிரவாதிகளுடன் செய்து கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு தற்கொலைத் தாக்குதல் அதிகரித்ததாகவும் தீவிரவாதிகளுக்கு சுதந்திரம் கொடுத்தது போல ஆகிவிடும் என்று கூறி இதற்கு அமெரிக்காவும், ஆப்கானிஸ்தான் அதிகாரிகளும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர் இந்த எதிர்ப்பை மீறி பாகிஸ்தான் இப்படி ஒப்பந்தம் செய்து கொண்டு உள்ளது. (அ-5)

# வேலை தேடிவரும் வெளிநாட்டினருக்கு எதிராக தென்னாபிரிக்காவில் கலவரம், 42பேர் பலி

(ஜோஹன்னஸ்பர்க்)

தென்ஆபிரிக்காவுக்கு வேலை தேடி வரும் அண்டை நாட்டினருக்கு எதிராக உள்ளூர் மக்கள் கலவரத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த கலவரத் தில் இதுவரை 42 பேர் பலியானார்கள். கலவரத்தை அடக்க ஜனாதிபதி தபோ எம்பேகி இராணுவத்தை அழைத்தார்.

### வேலை வாய்ப்பில் பாதிப்பு

தென் ஆபிரிக்காவில் செல்வ வளம் அதிகம். பொருளாதார ரீதியாக முன்னேறிய நாடாகவும் அது இருப்பதால் அதை சுற்றிலும் உள்ள பொருளாதாரத்தில் நலிவு அடைந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் வசதியான வாழ்வு தேடி அங்கு வந்து குடியேறுகிறார்கள்.

வெளிநாட்டினரின் வருகையால் உள்நாட்டினருக்கு வேலை வாய்ப்பு குறைந்து போகிறது. நாட்டில் வேலை இல்லாத் திண்டாட்டம் 40 சதவீதமாக உள்ளது. இதனால் உள்ளூர் மக்கள் -இளைஞர்கள் வெளிநாட்டினருக்கு எதிரான கலவரத்தில் ஈடுபட்டு உள்ளனர் .

### 42 பேர் பலி

கடந்த ஒரு வார காலமாக அங்கு கலவரம்நடந்து வருகிறது. இதுவரை கலவரத்துக்கு 42 பேர் பலியானார்கள். 16ஆயிரம் பேர் வீடு வாசல் இழந்தனர் . கலவரம் தொடர்பாக 400 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மாநில பொலீஸ் செய்தி தொடர்பாளர் கோவிந்தசாமி மாரிமுத்து தெரிவித்துள்ளார். (அ-5)

# டோனி பிளேயர் சென்ற விமானத்தை வழி மறித்தன இஸ்ரேல் போர் விமானங்கள்

(டெல்அவிவ்)

இங்கிலாந்து முன்னாள் பிரதமர் டோனிபிளேயர் மத்திய கிழக்கு



நாடுகளுக்கான அமைதிக்குழு பிரதிநிதியாக செயற்பட்டு வருகிறார்.

எகிப்தில் நடந்த உலக பொருளாதார மாநாட்டில் கலந்துகொண்டு இஸ்ரேல் நாட்டுக்கு விமானத்தில் சென்றுகொண்டிருந்த பல்வேறு நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகளும் அந்த விமானத்தில் பயணம் செய்தனர்.

இஸ்ரேல் நாட்டு வான் எல்லைக்குள் அந்த விமானம் நுழைந்த போது இஸ்ரேல் நாட்டு இரண்டு போர் விமானங்கள் நடுவானில் டோனிபிளேயரின் விமானத்தை வழி மறித்தன எதிரிநாட்டு விமானங்கள் என தவறாக நினைத்து அந்த விமானத்தை துரத்தின.

குண்டுவீசி தாக்குதல் நடத்தவும் போர் விமானங்கள் தயாரானது.

இதையடுத்து டோனி பிளேயரின் விமானம் புறப்பட்ட இடத்திற்கு திரும்பிச் சென்றது. ரேடியோ மூலம் போர் விமானங்களுக்கு தாங்கள் அமைதிக்குழுவை சேர்ந்தவர்கள் என தகவலும் கொடுத்தது.

அவசரமாக தகவல் கொடுத்ததால் இஸ்ரேல் விமானங்கள் தாக்குதல் நடத்தவில்லை.

இதனால் டோனிபிளேயரும் மற்றவர்களும் தப்பினார்கள்.

இந்த குழறுபடி பற்றி இஸ்ரேல் விசாரணை நடத்தி வருகிறது. (அ-5)

# "வினைத்திறனான நுண்ணங்கியியல்" தொழில்நுட்பம்

## (Effective Microbial Technology) (EMT)

திண்மக் கழிவுகள் நாளாந்த மனித வாழ்க்கையில் உருவாகிய வண்ணம் இருப்பதை நாம் அனைவரும் அறிவோம். திண்மக் கழிவுகள் எனப்படுபவை மனித மற்றும் தொழிற்சாலைகளின் நாளாந்த செயற்பாட்டின் விளைவாக உருவாகும் பொருளாதார பெறுமதியற்ற திண்மப் பதார்த்தங்கள் ஆகும்.

திண்மக் கழிவுகள் முறையற்ற விதத்தில் முகாமைத்துவம் செய்யப்பட்டால் பின்வரும் தீய விளைவுகள் சூழற் தொகுதிக்கு ஏற்படும்.

1. இலங்கையில் 70% ஆன கண்டல் மற்றும் சதுப்பு நிலங்கள் தொழிற்சாலைகளில் இருந்து வரும் திண்மக் கழிவுகளால் அழிவடைகின்றன.
2. நீர் நிலைகளில் $No_3^-$, $Po_4^{3-}$ கலன்கள் செறிவடைவதால் நற்போசாணையாக்கம் ஏற்பட்டு நீர் வாழ் உயிரிகள் இறக்கும்.
3. மண்ணின் அமிலத் தன்மை கூடும்.
4. பிளாஸ்ரிக் பொருட்களை எரிப்பதால் $No$, $So_2$ போன்ற நச்சுவாயுக்கள் உருவாகும்.
5. நிலத்தடி நீர் மாசடையும் (Ground water pollution)

ஆகவே மனிதனையும் சூழலையும் பாதுகாக்கும் விதத்தில் திண்மக்கழிவுகள் பின்வரும் முறைகளில் முகாமைத்துவம் செய்யப்படலாம்.

1. கழிவுகளை மட்டுப்படுத்தல்(Reduction)
2. மீள்வட்டச் செயன்முறை (Recycling)
3. மீள் பயன்படுத்துதல்(Reuse)
4. கலப்புரம் உருவாக்குதல்(Compost Making)

தற்பொழுது உலகளாவிய ரீதியில் சேதன பயிர்ச்செயகை பிரபல்யம் அடைந்து வருகிறது. ஆகவே கலப்புரம் பற்றிய எண்ணக்கரு விவசாயிகள் மத்தியில் உருவாக்கப்பட வேண்டும். வினைத்திறன் நுண்ணங்கிகள் கலப்புரச் செயன்முறையில் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

வினைத்திறன் நுண்ணங்கிகளாக ஒளித்தொகுப்பை மேற்கொள்ளும் பக்ரீரியாக்கள், மதுவங்கள் (yeast), இலத்திரிக் அமில பக்ரீரியாக்கள் (Lasticacid bacteria), actinomycetes ஆகியன பயன்படுத்தப்பட முடியும். பிரதானமாக இவ் நுண்ணங்கிகள் கழிவுகளை விரைவாக பிரிகை அடைய செய்வதற்கும், நைதரசன் மற்றும் நுண்போசணை மூலகங்களின் அளவை கலப்புரத்தில் அதிகரிக்கச் செய்வதற்கும், கழிவுகளில் இருந்து வரும் துர்நாற்றத்தைக் குறைப்பதற்கும் உதவுகின்றன.

### கலப்புர உருவாக்கத்தில் வினைத்திறனான நுண்ணங்கிகளின் பங்கு

நன்கு தரம் செய்யப்பட்ட சேதனக் கழிவுகள் கலப்புரம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படமுடியும். கலப்புர உருவாக்கத்தில் சேதனக் கழிவுகளின் பிரிகையை தூண்டும் பக்ரீரியாக்கள் (Decomposer bacteria), நைதரசன் பதிக்கும் பக்ரீரியாக்களான Nitrosomonas, Azatobacter ஆகியன பயன்படுத்தப்பட முடியும். இவ் நுண்ணங்கிகள் பிரதானமாக நீர்ப் பகுப்பு நொதியங்களை (Hydrolysing enzymes) உருவாக்குவதன் மூலம் சேதனக் கழிவுகளை பிரிகையடையச் செய்கின்றன. 1 தொன் சேதனக் கழிவுகளை பிரிகை அடையச் செய்வதற்கு, இந்த நுண்ணங்கிகளை செறிவாகக் கொண்ட 200 l தண்ணீர் அவசியமாகும்.

ஒவ்வொரு 7-10 நாட்களுக்கும், சேதனக் குவியல்கள் நன்கு புரட்டப்பட வேண்டும். ஏனெனில் நன்றாக காற்றோட்டத்தை ஏற்படுத்துவதற்கும் பக்ரீரியாக்களை கழிவுகளின் மீது சீராகப் பரவச் செய்வதற்குமேயாகும். இவ் நுண்ணங்கிகளின் உயர்வான தொழிற்பாட்டிற்கு 45-55% ஈரலிப்பு அவசியமாகும்.

இவ் நுண்ணங்கிகள் சேதனக் கழிவுகளில் தொழிற்பட்டு கலப்புரங்களின் வெப்பநிலையை 70-75°C வரை 26-36 மணித்தியாலங்களில் உயர்த்தும். இவ் வெப்பநிலையில் பெரும்பாலான தீய நுண்ணங்கிகள் அழியும். அத்துடன் பறவைகள், மிருகங்கள், நுளம்புகள் சேதனக் கழிவுக் குவியல்களை அண்மிப்பதைத் தடுக்கும்.

### கலப்புர உருவாக்கத்தில் வினைத்திறனான நுண்ணங்கிகளைப் பாவிப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகள்

1. நச்சுத் தன்மையான வாயுக்கள் உருவாதல் தடுக்கப்படும்.
2. துர்நாற்றம் உருவாதல் தடுக்கப்படும் (2-3 நாட்களில்)
3. கலப்புரமானது 4-6 கிழமைகளில் விரைவாக உருவாக்க முடியும்.
4. கலப்புரக் குவியலின் வெப்பநிலை 75°C வரை உயர இவ் வெப்பநிலையில் தீய நுண்ணங்கிகள் அழியும்.
5. கலப்புரத்தில் நுண்போசணை மூலகங்களான Zn, Cu, Na, Fe போன்றவற்றின் அளவு கூடும்.
6. கலப்புரத்தில் நைதரசன் பதிக்கும் பக்ரீரியா பொஸ்பேற்றை கரையச் செய்யும் பக்ரீரியா ஆகியவற்றின் அளவு கூடும். ஆகவே கலப்புரத்தில் நைதரசன் பொஸ்பேற்றின் அளவு கூடும்.

**ந.கண்ணன்**
இறுதியாண்டு மாணவன்,
விவசாய இயந்திரவியல் துறை,
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

மேற்கூறப்பட்ட நன்மைகளை கலப்புர உருவாக்கத்தில் EM தொழில்நுட்பத்தைப் பாவிப்பதன் மூலம் பெறக்கூடியதாக இருப்பதால், யாழ்ப்பாணத்தில் யாழ்.மாநகர சபையால் காக்கைதீவுப் பகுதியில் உருவாக்கப்பட்ட கலப்புர செயற்திட்டத்துடன் இவ் தொழில்நுட்பமும் ஒன்று சேர்த்து பாவிக்க முடியும்.

இதன்மூலம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நாம் சேதனப் பயிர்ச் செய்கையை தூண்ட முடியும். இதன்மூலம் மக்களை அதிகளவு கொடிய விவசாய இரசாயனங்களில் இருந்து பாதுகாக்க முடியும். ◆

# இயற்கை பீடை நாசினிகளின் தயாரிப்புமுறைகளும் அவற்றின் பயன்பாடுகளும்

எம்மைச் சூழவுள்ள பயன்தரு மரங்கள், செடிகள், கொடிகள் என்பவற்றிலிருந்து மருத்துவ தேவைகளுக்கு மட்டுமன்றி, பூச்சி கொல்லிகள் மற்றும் வீட்டு பூச்சிகளைக் கட்டுப்படுத்தல் போன்ற பயன்பாடு தொன்றுதொட்டு நடைபெற்றுள்ளன. செயற்கை பூச்சிக் கொல்லிகளின் பயன்பாடு 1939இல் 'போல்முல்லர்' என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட DDT பாவனையுடன் பெரிதும் பரவியது. இச் செயற்கை பீடை நாசினிகளின் பயன்பாடு அதிக பயன்களை தந்ததினால் இயற்கை பீடை நாசினிகளின் பயன்பாடு ஓரம் கட்டப்பட்டு போய்விட்டது. இருப்பினும் செயற்கை பீடை நாசினிகளின் பக்கவிளைவுகள் மனிதனை மட்டுமன்றி சுற்றாடலையும் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றது. நீர் நிலைகள், வாழ்விடங்கள் மற்றும் ஏனைய இடங்களில் இயற்கை சமநிலையையும், பயன்தரு தாவர பூச்சி இனங்களையும் இவ் இரசாயனங்கள் பெரிதும் பாதிப்பதுடன் மட்டுமல்லாது உயிரியல் பல்வகைத் தன்மையிலும் அதிகளவு பாதிப்பையும் ஏற்படுத்துகின்றது.

இப் பாதிப்புக்கள் உணரப்பட்ட நிலையில் அண்மைக் காலங்களில் இயற்கை பீடை நாசினிகளின் பயன்பாடும், அவற்றைப் பற்றிய அறிவூட்டல்களும் மறுபடியும் உயிர்பெற்று இருக்கின்றன. தாவரங்களின் பகுதிகள் பூச்சிகளிற்கு தீங்கை விளைவிப்பதும், இயற்கை சமநிலையில் குறிப்பிடத்தக்களவு பாதிப்பை ஏற்படுத்தாமையும் கண்முன்னே தயாரித்து பெறப்படுவதனாலும், இத் தாவரப் பீடைநாசினிகளின் பயன்பாடு பெரிதும் செல்வாக்கு பெற்றுள்ளன.

தயாரித்து உடனடியாக விசிறப்படுவதாலும் தயாரித்தல் செலவு ஒப்பீட்டளவில் மிகக் குறைவானதாலும் விவசாயிகள் அதிகளவு நம்பிக்கை கொண்டுள்ளனர். அத்துடன் இத்தாவர பீடை நாசினிகளிற்குரிய மூலப்பொருட்கள் பற்றிய அறிவு எம்மவர் மத்தியில் ஓரளவு உண்டு. இவ் வகையான இன்னோரன்ன அனுகூலங்கள் இயற்கை முறை பயிர்ச்செய்கைகளுக்கு பெரிதும் பயன்படுகின்றன. சமகால விவசாய முன்னேற்றத்திற்கு இயற்கை தாவர பீடை நாசினிகள் பெரிதளவில் வலுவூட்டி உற்பத்தித் திறனை அதிகரிப் பதனால் இவ்வகையான இயற்கை பீடைநாசினிகளின் தயாரிப்பும் அவற்றின் பயன்பாடும் இவ்வாக்கத்தில் தெளிவாக்கப்பட்டுள்ளது.

### பயிர் முகாமைத்துவத்தில் உயிருள்ள தாவரங்களின் பயன்பாடு

#### தற்கொலைப்பயிர்களும், பூச்சிப் பொறிப் பயிர்களும் (Suicidal crops and trap crops)

இயற்கைத் தாவரங்களின் உள்ளடக் கலங்கள் பூச்சிகளைத் துரத்தி தூரத்தில் வைப்பதற்கு விவசாயிகளுக்கு பயனுள்ளதாக அமைகின்றன. அவற்றில் வாசனை தரும் திரவியங்கள் பூச்சிகளைத் துரத்திவிடுகின்றன. அவற்றைவிட மேலும் சில பயிராகக் கொள்ளப்படாத தாவரங்கள் பயிர்த்தாவரங்களை விட அதிகளவில் பூச்சிகளை கவர்ந்திழுப்பதனால் பயிர்தாவரங்கள் தப்பித்துக்கொள்கின்றன. இவ்வகையில் அதிகரித்த பூச்சிகள் ஒன்றுசேர்ந்த இவ் வகைத் தாவரங்கள் ஒன்றில் தானாக அழிந்து தற்கொலைத் தாவரங்களாகி பயிர்த்தாவரங்களைப் பாதுகாக்கின்றன அல்லது இவைகள் பூச்சிப் பொறிகளாகவும் பயன்படுகின்றன. செவ்வந்தி, ஆமணக்கு, கொத்தமல்லி, குரக்கன் மற்றும் சில அவரைத் தாவரங்கள் அழுக்கணவன், பனிப்பூச்சி மற்றும் துளைப் புழுக்கள் என்பவற்றிற்கு பூச்சிப் பொறிகளாகப் பயன்படுகின்றன.

செவ்வந்தி (Targets spp), தக்காளி பயிருக்கு அருகில் அல்லது எல்லைகளில் இலை, காய் துளைப்பானையும், பனிப்பூச்சிகளையும் கட்டுப்படுத் தும் பூச்சிப்பொறியாக பயன்படுகின்றது. அதே போல ஆமணக்கானது நிலக்கடலையில் வரும் அநேக இலைப் பயிர் புழுக்களின் தற்கொலைப் பயிராக பயன்படுகின்றது. உள்ளி, வெங்காயம் போன்ற பயனுள்ள ஊடு பயிர்களாக இப் பயிர்கள் பிரதான பயிர்களின் பீடைகளைத் துரத்துவதில் வல்லன.

#### உணர் கொம்புப் பயிர்கள் (Antenna crops)

நிலக்கடலைச் செய்கையில் சுற்றோரங்களில் உயரமான வேறு தானியப் பயிர்கள் உதாரணமாக சாமை, தினை போன்றன நடப்படுவதால் பூச்சிகள் கவரப்பட்டு அழிந்துபோகின்றது. இவ் வகைப் பயிர்கள் உணர்கொம்புப் பயிர்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

#### இணைப் பயிர்கள் (Combine crop)

பிரதான பயிருடன் சேர்ந்து வளரக் கூடிய பயிருக்கு தாக்கம் விளைவிக்காத செவ்வந்தி போன்ற பயிர்கள் பிரதான பயிர்களில் பீடைகளால் ஏற்படும் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதாக அறியப்பட்டுள்ளது.

### இயற்கை பீடை நாசினிகளின் தயாரிப்பு முறைகள்

தாவரங்களின் இலைகள், விதைகள் மற்றும் ஏனைய பகுதிகள் அவ்வப்போது தாவரப் பீடை நாசினிகள் தயாரிப்பில் மூலப்பொருட்களாகப் பயன்படுகின்றன.

#### 1. வேம்பும் வேம்பு சார்ந்த பொருட்களும் (Azadirachta indica)

வேப்பமரம் அதிகளவில் காணப்படுவதாலும் இதன் பொருட்கள் சூழலில் தாக்கங்கள் குறைவாக ஏற்படுத்துவதனாலும் குறைந்த விலையான பொருட்கள் என்பதாலும் அதிக அளவில் விவசாயிகளால் வேம்பு சார்ந்த பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. அழுக்கணவன், பனிப்பூச்சி, சாறு உறிஞ்சிகள், துளைப்பான் பூச்சிகள் மற்றும் விலாங்குப் புழுக்கள் என்பவற்றிற்கு வேம்பு சார் தயாரிப்புக்கள் பெரிதும் பயன்படுகின்றன. 50கிராம் வேப்பம் விதையை நன்றாக அரைத்து ஒருநாள் ஊறவிட்டு வடிகரைசலை ஒரு லீற்றருக்கு தயாரித்து சிறிதளவு சவர்க் காரத்துடன் கலந்து விசிறலாம்.

200கிராம் நிறையான வேப்பம் இலைகளை (காம்பு இன்றி உருவி) தண்ணீரில் கொதிக்கவைத்து ஒரு இரவு ஊறவிட்டு அடுத்தநாள் ஒரு லீற்றருக்கு தயாரித்து விசிறலாம். 10மில்லி லீற்றர் வேப்பெண்ணெய் ஒரு கிலோக்கிராம் அவரை இனப் பயிர் விதைகளை பரிகரணப் படுத்த போதுமானது.

400கிராம் நன்றாக அரைத்த வேப்பம் பிண்ணாக்கு ஒரு சதுர மீற்றருக்கு பரவி விலாங்குப் புழுக்களை கட்டுப்படுத்தலாம்.

#### 2. அன்னமுன்னா (Annona Squamosa)

அன்னமுன்னா மரத்தின் இலைகளின் பசை வலுவான ஒரு தாவரப் பீடைகொல்லி ஆகும். இம் மரத்தின் ஒரு பகுதி இலையை 5 பகுதி நீரில் நன்றாகக் கரைத்து வடிகட்டிய திரவத்தை அழுக்கணவன் சிவப்புப் புள்ளி வண்டு என்பவற்றை கட்டுப்படுத்த பயன்படுத் தலாம். அன்னமுன்னா பழவிதைகளில் 50 கிராம் அரைத்து கலவையாக்கி கொதிக்க வைத்தல் வேண்டும். வடிகட்டிய இத்திரவமும் 1லீற்றருக்கு தயாரித்து மேற்கூறிய பீடைக ளுக்கு எதிராகப் பயன்படுத்தமுடியும்.

#### 3. துளசி (Ocimum spp)

ஒரு பகுதி இலையை ஐந்து பகுதி நீரில் கொதிக்க வைத்து மூடி ஒரு நாள் ஊறவிட்டு பூச்சி நாசினியாக பிரயோகிக்கலாம்.

#### 4. உள்ளிக்கரைசலின் பயன்பாடு (Alium sativam)

உள்ளிப் பூண்டில் 10கிராம் நன்றாக அரைத்து சிறு துளிகள் மரக்கறி எண்ணெயுடன் கலந்து 1 லீற்றர் கரைசலில் ஒரு நாள் ஊறவிடல்வேண்டும். ஊறவிட்டு எடுத்த வடிதிரவத்தை மிளகாய், தக்காளி, வெங்காயம் போன்ற பயிர்களை தாக்கும் பனிப் பூச்சிக ளுக்கும் சிற்றுண்ணிக்கும் எதிராகப் பயன்படுத் தலாம்.

#### 5. இஞ்சிக் கிழங்கு (Zingiber officinale)

50கிராம் இஞ்சிக்கிழங்கை அரைத்து ஒரு லீற்றர் கரைசலாக்கி ஒரு இரவு ஊறவிட்டு பனிப் பூச்சியையும் வெண் ஈயையும் கட்டுப்படுத்த முடியும்.

#### 6. பாவட்டை (Pavata indica)

200கிராம் பாவட்டை இலையை அரைத்து ஒரு லீற்றர் கரைசலில் முழு இரவு ஊறவிட்டு சாறு உறுஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த முடியும்.

#### 7. ஆடாதோடை (Adhatoda zeykinical)

ஆடாதோடை இலையில் 200கிராமை சிறிதளவு நீரில் கொதிக்கவைத்து ஒரு லீற்றர் கரைசலாக்கி முழு இரவு ஊறவிட்டு இலை உண்ணும் மயிர்க்கொட்டிகளுக்கு எதிராக பயன்படுத்தலாம்.

#### 8. நாயுண்ணி/கடுகுநாவல் (Lantana camera)

200கிராம் நாயுண்ணித்தாவர இலையைக் கொதிக்கவைத்து ஊறவிட்டு ஒரு லீற்றர் கரைசலாக்கி இலை உண்ணும் வண்டுகளுக்கு எதிராகப் பயன்படுத்தலாம்.

#### 9. மிளகாய் (Capsicum annum)

செத்தல் மிளகாய், மரக்கறிகள் மற்றும் பூச்செடிகளில் ஏற்படும் பொதுவான பூச்சித்தாக்கத்தைக் கட்டுப்படுத்தப் பயன்படுகின்றது. மரக்கறிகளின் பாகத்தை காரமாக்காது பதிலாக பயிர்களின் மேற்பரப்பில் தங்கியிருந்து மூன்று கிழமை வரை பூச்சிகளை துரத்த வல்லது. மிளகாய் கரைசல் தாவரங்களையும் அதன் பகுதிகளையும் வெட்டி அழிக்கும் முயல், அணில் போன்றவற்றையும் தோட்டத்திற்கு வரவிடாது தடுத்து விடும்.

100கிராம் தனிமிளகாய் தூள் ஒரு லீற்றர் நீரில் கலந்து நன்றாக கொதிக்கவைத்து பின் ஆறவிடவேண்டும். வடித்தெடுக்கப்பட்ட திரவத்துள் சிறிதளவு சவர்க்கார கரைசல் கலந்து விசிற முடியும். இக் கரைசலானது எறும்புகள், அழுக்கண வன், புழுக்கள் மற்றும் கோவா புழு என்பவற்றைக் கட்டுப்படுத்துவதுடன் பூசணி குடும்பத்தின் தாவரத்தில் ஏற்படும் வைரசுகளையும் கட்டுப்படுத்தவல்லது.

#### 10. கிறிசாந்திமம் பூஞ்செடி (Chyrisanthimum sp)

கிறிசாந்திமம் பூக்களில் பூச்சிக்குள்ளும் தன்மையுள்ள பைரிதிரின் எனும் இரசாயன இயற்கையாகவே காணப்படுகின்றன. இவ் இரசாயனம் பூச்சிகளின் நரம்புத்தொகுதியை துரிதகதியில் தாக்குவதால் பூச்சிகள் இயக்கமற்றதாகி விடுகிறது. இச் கிறிசாந்திமப் பூக்களின் சாறானது மிகவும் சக்தி வாய்ந்த தாவரப் பீடை நாசினியாகும்.

**திரு.சி.ஜே.அரசகேசரி**
பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையம், வவுனியா
**செல்வி. பாலசிங்கம் பாலகௌரி**
விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி

#### 11. பலாப்பழம் (Artocarpus heterophyllus)

நன்றாகக் கனிந்து வாசனை வீசும் பலாப்பழத்தின் மையப் பகுதியை தோட்டத்தில் தொங்கவிடுவதனால் பாகல், புடோல், சுரக்காய் மற்றும் கொய்யா போன்றவற்றைதாக்கும் பழஈக்கள் கவரப்பட்டு தொங்கவிடப்பட்ட பலாப்பழத்தின் மையப்பகுதியில் உள்ள ஒட்டும் தன்மையுள்ள பாலில் அகப்பட்டுக்கொள்ளும். இவை பின்னர் அகற்றப்படும். ◆

# யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் திருக்கோயில் மஹோற்சவ - கொடியேற்றத் திருவிழா





## மஹோற்சவ பிரதம குருவின் அருளாசியுரை



யாழ்ப்பாண திருநகரை அணி செய்யும் ஆலயங்களுள் பூர்வீக சரித்திரப் பெருமைகளோடு பிரசித்தி பெற்று விளங்கும் ஆலயம் வண்ணை வீரமாகாளியம்பாளின் ஆலயம். மக்களை வாழ்வாங்கு வாழவைக்கும் தெய்வீக நிலையங்களே ஆலயங்களாகும். இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் அம்பாள் சக்தியும் கருணையும் மிக்கவள். அருள்மாரி பொழிந்து குளிர வைப்பவள். அல்லல்கள் அகற்றி ஆறுதல் அளிக்கும் கருணைத் தெய்வம். அருள்வளமும், பொருள் வளமும் ஒருசேரப் பெற்ற அன்பர்கள் பலரை தன்னகத்தே கொண்ட திருக்கோவில் இதுவாகும். காலந்தோறும் அம்பாளின் ஆலயத்தை கலைக் கோவிலாகக் காணும் சீரிய எண்ணமிக்க திருப்பணிச் செல்வர்கள் வாழும் புனித திருப்பதி இதுவாகும்.

மலர்ந்துள்ள சர்வதாரி வருஷத்திலே வருடாந்த மஹோற்சவம் இன்று (2008.05.25) ஞாயிற்றுக் கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் மஹோற்சவங்கள் நடை பெறவுள்ளது. மஹோற்சவ நாட்களில் அம்பாளை தரிசிக்கும் அடியார்களும் உலகமெங்கும் வாழும் அம்பாளின் பக்தர்களுக்கும் மண்ணில் எல்லோரும் நல்ல வண்ணம் வாழவும் நாட்டில் சாந்தி, சமாதானம் அமைதி வாழ்வு திரும்பவும் அம்பாளைப் பிரார்த்தித்து ஆசீர் வதிக்கின்றேன்.

"சிவாச்சார்ய இளவரசு"

*சிவஸ்ரீ. சிவ. கமல்ராஜ் குருக்கள்*

*பிரதம குரு வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்.*



மெய்யடியார்களே!

மங்கலகரமான சர்வதாரி வருஷம் வைகாசித் திங்கள் 12ம் நாள் (25.05.2008) ஞாயிற்றுக் கிழமை நாளை காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து 10மணியளவில் கொடியேற்ற வைபவம் இடம்பெற அம்பாள் திருவருள் பாலித்துள்ளாள்.

எனவே அத்தருணம் அடியார்கள் வருகை தந்து அம்பாளின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

## ஆலய பிரதம குருக்களின் ஆசியுரை



அகில புவன மாதாவாகிய அன்னை வீரமாகாளியின் சர்வதாரி வருஷ மஹோற்சவம் நாளை ஆரம்பமாகின்றது.

இவ்வேளையில் அம்பாளை தரிசிக்கும் அடியார்களுக்கும் உலகெங்கும் வாழ்கின்ற அம்பாளின் பக்தர்களுக்கும் மலந்துள்ள சர்வதாரியில் சர்வ விக்கினங்களையும் நீக்கி நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைக்க எல்லாம் வல்ல வீரமாகாளி அம்பாளை பிரார்த்தித்து அருள் ஆசிகூறுகின்றேன்.

*மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்*

*சிவஸ்ரீ. நா. சிவதர்ஷக் குருக்கள்*

*பிரதம குரு வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்.*

### நிகழ்ச்சிகள்

காலை 9மணிக்கு -வசந்த மண்டபப் பூசை
காலை 10மணிக்கு- கொடியேற்ற வைபவம்
காலை 11மணிக்கு-அம்பாள் விசேட அலங்காரத்துடன் வீதியுலா
காலை 12 மணிக்கு அன்னதான வைபவம்

### விசேட மேளக்கச்சேரி

கோண்டாவில் கலாபூசணம்
V.K கானமூர்த்தி அவரது புதல்வன்
கிருஸ்ணதாசன் குழுவினர்
இணுவில் N.R கோவிந்தசாமியின் புதல்வர்கள்
(ஈஸ்வர ஞான சாயித்திய இசை அரசு)

கொடியேற்ற திருவிழா உபயகாரர்

(1236)


# முஸ்லிம்களின் மீதான ஹிஸ்புல்லாவின் கரிசனை போலியானதே-'த மோர்னிங் லீடர்' தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம்களின் மீதான எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவின் கரிசனை போலியானது தான் என்று கொழும்பில் இருந்து வெளியாகும். "த மோர்ணிங் லீடர்" வார ஏடு சாடியுள்ளது.

அந்த ஏட்டில் எம். எல். ஏ.எம். ஹிஸ் புல்லா குறித்து எழுதப்பட்டுள்ள கட்டுரையின் தமிழ் வடிவம்,

எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லா முஸ்லிம் சமூகத்தை அவமானப்படுத்துவதுடன் நின்றுவிடாது முஸ்லிம்களுக்கும் ஏனைய சமூகத்தினருக்கும் இடையிலான உறவில் மோசமான விரிசலை ஏற்படுத்தும் வகையில் செயப்படுகின்றார்.

எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா ஓர் அரசியல் அநாதையாக்கப்பட்டுள்ளார் எனக் கூறின் அது மிகைப்படாது. கட்சித் தாவலில் ஈடுபடுவதற்கு முன்னர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படாத முதலமைச்சர் வேட்பாளராக எம்.எல்.ஏ.எம்.ஹிஸ் புல்லாவே காணப்பட்டார்.

எனினும் மஹிந்தவின் ஆலோசகரும் சகோதரமான பசில் ராஜபக்ஷ்வுடனான சந்திப்பை அடுத்து அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிடத் தீர்மானித்தார்.

அரசாங்கத்துடன் இணைந்து கொண்டால் மட்டுமே முஸ்லிம் முதலமைச்சர் என்ற இலக்கை அடைய முடியும் என்ற வார்த்தைகளை நம்பி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா ஏமாற்றமடைந்துள்ளார்.

ஏற்கனவே பிள்ளையான் ஆளும் கட்சி சார்பில் தேர்தல் களத்தில் குதித்திருக்கும் தருணத்தில் எவ்வாறு முதலமைச்சர் பதவி சாத்தியப்படும் என்பதை சிந்திக்க முடியாத அடிப் படை அரசியல் சாணக்கியமற்ற ஒருவராகவே எல். எம். ஏ.ஹிஸ்புல்லாவை நோக்கத் தோன்றுகிறது.

தற்போதைய தேர்தல் முறைமைகளின் காரணமாக எந்தவித முன் அனுபவமுமின்றி நாடாளுமன்றத்திற்குள் இலகுவாக பிரவே சிக்க வாய்ப்புக்கிட்டியுள்ளது. பல இளம் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது.

இதன் காரணமாக தமது ஆளுமை மீது அதீத நம்பிக்கை கொண்டு அவர்கள் ஆபத்தான முயற்சிகளில் குதிக்க விளைகின்றனர்.

முஸ்லிம் முதலமைச்சர் ஒருவர் உருவாவதை தடுத்து துரோகச் செயலில் ஈடுபடுவதாக எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லா ரவூப் ஹக்கீம் மீது குற்றம் சுமத்தியிருந்தார்.

எனினும் அதே சுட்டுவிரல் இன்று வேறு ஒருவரை நோக்கிச் சுட்டப்படுகின்றது.

எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவின் நேர்மை குறித்து சந்தேகம் எழுப்பப்படுகின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சி அமைத்தால் அதற்கு ஆதரவு வழங்கத் தயார் என எம்.எல் ஏ. எம். ஹிஸ்புல்லா பி.பி.சி.உலக சேவைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தார். எனினும் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவின் கடந்த காலத்தை திரும்பிப்பார்க்கும் போது அவரது நேர்மை குறித்து சந்தேகம் ஏற்படுகின்றது. எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா முஸ்லிம் மக்கள் மீது காட்டும் கரிசனை போலியான ஒன்று என்பதனை நிரூபிக்க முடியும்.

மாகாணசபை உறுப்பினர் என்ற போதிலும் எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லாவிற்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் எவ்வித மாற்றங்களும் செய்யப்பட்டவில்லை என்பதன் ஊடாக அரசாங்கத்திற்கும் எம்.எல். ஏ.எம். ஹிஸ் புல்லாவிற்கும் இடையிலான பிணைப்பு தெளிவாகப் புலனாகிறது என்பதே எமது வாதம்.

இந்தக் குழப்பத்தை எம்.எல். ஏ.எம். ஹிஸ் புல்லா தனித்து உருவாக்கினார். எனவே அவரே இதனைத் தனித்து தீர்க்க வேண்டும். பிறந்த உடனேயே கிழக்கு மாகாண சபையை கொலை செய்வது ஒரு பயனற்ற செயலாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து எம். எல். ஏ.எம். ஹிஸ்புல்லா ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினாலும் அதுவும் நிலைக்கக்கூடிய வாய்ப்பில்லை.

எனினும் இந்த நிலைமை சொந்த விரல்களினால் கண்களைக் குத்துவதற்கு சமமான ஒன்றாகும்.

எதிர்கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைபற்றினால் முதல்மைச்சர் என்ற போலி மாத்திரையை விழுங்கிய அப்பாவி முஸ்லிம் மக்களுக்கு ஓரளவு ஆறுதலாக அமையும்.

சுயலாப நோக்கங்களுக்காக இரண்டு பாதைகளில் பயணிப்போருக்கு இறுதியில் என்ன நேரும் என்பதனை எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லா உணர்ந்துகொள்ள வாய்ப்பு கிட்டும் என்பதே எமது ஆழமான கருத்தாகும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# ஆங்கில மொழிப்பயிற்சி திட்டத்துக்கு 2010ஆம் ஆண்டு வரை நிதி ஒதுக்கீடு

வாழ்கைத்திறனுக்கான ஆங்கில மொழிப் பயிற்சி திட்டத்தை அமுல் படுத்துவதற்கு 2010 ஆம் ஆண்டுவரைக்கும் நிதி ஒதுக்கீடுசெய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இதற்கான பிரேரணையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்திருந்தார். இத் திட்டத்தின் படி 2008 ஆம் ஆண்டிற்கு 46 மில்லியன் ரூபாவும் 2009ஆம் ஆண்டுக்கு 62 மில்லியன் ரூபாவும் 2010ஆம் ஆண்டுக்கு 84 மில்லியன் ரூபாவும் செலவிடப் படும். இத்திட்டத்தை தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் ஜனாதிபதி செயலகம் செயற்படுத்தும். (அ-5)

# பேரவை அங்கத்துவத்தை இழந்தமைக்கு அரசே பொறுப்பு, உதவிகளும் தடைப்படலாம்

## ஐ.தே.க.பொதுச் செயலாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் நாட்டில் மனித உரிமை மீறல்களை தடுப்பதற்கான ஆக்க பூர்வ மான நடவடிக்கைகளை எடுக்காததன் காரணமாகவே ஐ. நா.மனித உரிமைப்பேரவையின் இலங்கை அங்கத்துவத்தை இழந்தது.

எதிர்காலத்தில் வெளிநாட்டு உதவிகளும் தடைப் படும்அபாயமும் தோன்றியுள்ளது என ஐ. தே.க. எச்சரிக்கை விடுத் துள் ளது. ஐ.நா. மனித உரிமை பேரவையின் அங்கத்துவத்தை அரசாங்கம் இழந்தது தொடர்பாக கருத்து தெரிவித்த போதே ஐ.தே.க பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர்மேலும் கூறியதாவது ஆட்கடத்தல்கள், கப்பம் கோருதல், கொலைகள் என நாளுக்கு நாள் நாட்டில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. இது தொடர்பாக பலமுறை நாம் அர சாங்கத்திற்கு அறிவித்துள்ளோம். பல அமைப்புக்களும் அறிவித்தன. வெளிநாட்டு மனித உரிமைகளுக்கான அமைப்புகளும் கண்டனங்களை வெளியிட் டன. ஆனால் அரசாங்கம் எதற்கும் செவிமடுக் கவில்லை மனித உரிமை மீறல்களை தடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ள வில்லை. மனித உரிமைகளை பாதுகாக்க அமைச்சர் இருக்கிறார். வெளிநாட்டமைச்சர் இருக்கிறார். இவர்கள் அனைவரும் நாட்டின் அங்கத்து வத்தை பாதுகாத்துக்கொள்ள தவறிவிட்டனர்.

இலங்கையில் இடம்பெறும் நிகழ்வுகளை உலகமே அவதானித்துக் கொண்டிருக்கிறது. கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் இடம் பெற்ற வாக்குக்கொள்ளை, பலாத்காரங்கள் இவை அனைத்துமே எமது நாட்டின் கௌர வத்திற்கு பங்கம் விளைவித்துள்ளன. எனவே ஐ.நா. மனித உரிமை பேரவையின் அங்கத்து வத்தை இழந்ததற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும்.

இனிமேலாவது மனித உரிமைகளை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் எதிர்காலத்தில் வெளிநாட்டு உதவிகள் தடைப்படும் அபாயகரமான நிலை ஏற்படும். அத்தோடு பல்வேறு சலுகைகளையும் இழக்க நேரிடும். (அ-5)

# இலங்கையில் நவீனதகவல் தொழில்நுட்ப நிலையம் நிறுவ, மைக்ரோ சொப்ட் நிறுவனம் தீர்மானம்

(கொழும்பு)

உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்



கழகங்களை உள்ளூரில் நிறுவுவதன் மூலம் நவீன உலக அறிவிலும் தொழில் நுட்பத்திலும் இலங்கை கால்பதிக்க வேண்டும் என உலகளாவிய தகவல் தொழில் நுட்ப ஜாம்பவானும் மைக்ரோ சொப்ட் நிறுவனத் தலைவருமான பில் கேட்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நவீன தகவல் தொழில் நுட்ப நிலையம் ஒன்றினை நிறுவவுள்ளதாகவும் இதன் மூலம் இலங்கையின் தகவல் தொழில் நுட்ப மற்றும் வணிகச் செயன்முறை புறச் செய்விப்புச் சந்தைக்கு சிறந்த ஒத்துழைப்பினை வழங்க முடியும் என எதிர்பார்ப்பதாகவும் மைக்ரோ சொப்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தோனேசிய அரசாங்கம் மைக்ரோ சொப்ட் நிறுவனத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த அரசாங்க தலைவர்கள் கூட்டமைப்பினருக்கான நிகழ்வில் கலந்து கொண்ட மைக்ரோ சொப்ட் தலைவரை அமைச்சர்களான கரு ஜயசூரிய, பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆகியோர் சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தகவல் தொழில் நுட்ப மற்றும் வணிகச்செயன்முறை புறச் செய்விப்புத் தொழிற்சந்தையை வளர்ச்சியடையச் செய்வதற்கான விசேட திட்டம் ஒன்றினை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

### அரச ஊழியர்களுக்கு விசேட தொழிற் திறன் பயிற்சி

இலங்கையில் முன்னெடுக்கப்படும் நெனசல. விதாதா தொழில் நுட்ப வள நிலையங்களூடாக கிராமப் புறங்களுக்கும் தொழில் நுட்ப அறிவைப் பரவலாக்கும் பொருட்டு அரசாங்க ஊழியர்கள் சுமார் 500 பேருக்கு விசேட தொழிற்திறன் பயிற்சிகளை மைக்ரோ சொப்ட் நிறுவனம் வழங்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-5)

---

தீமை விரைவில் செய்யப்படுகிறது-காயம் நீண்ட காலம் வலித்துக் கொண்டிருக்கிறது.
-பின்லாந்து

வலம்புரி

## தமிழ்-முஸ்லிம் உறவு கிழக்கில் பாதுகாக்கப்படவேண்டும்

கிழக்கில் கலவரம் தோன்றியதான செய்தி மன வேதனை தருவதாகும். தமிழ் – முஸ்லிம் சகோதரர்களுக்கு இடையே காழ்ப்புணர்வை ஏற்படுத்தி அவர்கள் முட்டி மோதுவதை அரசியல் பிழைப்பாக்கும் கயமைத்தனத்திற்கு பொது மக்கள் இரையாகிவிடக்கூடாது என வலம்புரி அண்மையில் எழுதிய ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டியிருந்தது.

வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் பூர்வீகம் தமிழ்-முஸ்லிம் சகோதரத்துவத்தின் தாயகமாகும்.

எனினும் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே எதிர்ப்பை-வன்முறையை-கலவரத்தை தூண்டிவிட்டு அவர்களுக்கிடையே பிரிவினையை ஏற்படுத்துவதில் சில தீய சக்திகள் முனைப்புடன் செயற்படுகின்றன.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டதால் ஏற்படப்போகும் பாரதூரமான விளைவுகளுக்குக் கட்டியம் கூறுவதாக கிழக்கில் ஏற்பட்டுள்ள கலவரத்தை குறிப்பிட்டு கொள்ளலாம்.

கிழக்கு மாகாணத்தில் ஒற்றுமையுடன் வாழ்ந்த தமிழ் – முஸ்லிம் மக்களிடையே, மாகாண உரிமை தொடர்பில், மோதலை ஏற்படுத்தும் சூழ்ச்சி அரங்கேறியுள்ளது.

1983களில் அப்போது ஆட்சிலிருந்தவர்கள் தெற்கில் தமிழருக்கு எதிரான கலவரத்தை தோற்றுவித்தனர்.

அன்றைய ஆட்சியாளர்களின் ஆசியுடன் கட்டவிழ்த்து விடப்பட்ட 83 ஜுலைக் கலவரத்தினால் தமிழ் மக்கள் பட்ட துன்ப துயரங்களும், கொடூரங்களும் மனித மொழிகளின் வரையறைப்பாட்டிற்குள் அடக்கி விடமுடியாதவை.

அன்றைய ஆட்சியாளர்கள் நினைத்திருந்தால் அந்த இனக்கலவரத்தை ஒட்டு மொத்தமாக நிறுத்தியிருக்க முடியும். ஆக, ஆட்சியாளர்களின் பின்னணியில் அரங்கேற்றப்பட்ட அடாவடித் தீயை அணைப்பதற்கு பல நாட்கள் எடுத்தன.

அண்டைய நாடான இந்தியாவில் பிரதமராக இருந்த காலஞ்சென்ற இந்திராகாந்தியின் அதட்டலும், வெருட்டலுமே 83 ஜுலை கலவரத்தை தணித்தது எனலாம்.

ஆட்சியாளார்களால் உரு ஏற்றி விடப்பட்ட இனக்கலவரப் பேயாட்டத்தில் சிங்கள மக்களும் ஆடி மகிழ்ந்தனர். ஆனால் இன்று சிங்கள மக்களிடையே சிந்தனைத் தெளிவு ஏற்பட்டுள்ளது என்பதும், தெற்கில் கலவரம் ஏற்பட்டால் அதற்கான விளைவு சர்வதேச மட்டத்தில் மிகவும் மோசமாக இருக்கும் என்ற யதார்த்த உணர்வும் தென்பகுதியில் இன மோதலை-கலவரத்தை அடக்கி வைத்துள்ளது.

இவ்விதம் தெற்கில் அடங்கிப்போன இன வன்முறைகளால் ஆத்திரம் கொண்டவர்கள், தமிழ்-முஸ்லிம்களுக்கிடையே வன்முறையை தூண்டிவிடுவதில் தீவிரம் காட்டுகின்றனர்.

இத்தகைய விஷமதாரிகளின் போக்கினை முறியடித்து தமிழ் – முஸ்லிம் சகோதரர்கள் தமது ஒற்றுமையை கிழக்கில் வலுப்படுத்த முன்வரவேண்டும். இது காலத்தின் அவசர தேவையாகும்.

---

# காணாமற் போனவர்களை இனிமேலாவது விடுவித்து அரசு தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும்

## மனோ கணேசன் எம்.பி.கோரிக்கை

(கொழும்பு)

ஐ.நா. அமைப்பு இப்போது வழங்கியுள்ள இந்தத் தீர்ப்பு கூறும் செய்தியை புரிந்து கொண்டு இதுவரையில் காணாமல் போனவர்களை விடுவித்து கணக்குக் கூறுவதன் மூலம் இலங்கை அரசு தன்னைத்திருத்திக்கொள்ள முன்வர வேண்டும். இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கின்றார். மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் மக்கள் கண்காணிப் புக் குழுவின் ஏற்பாட்டாளருமான மனோ கணேசன் எம். பி.

ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் உறுப்புரிமைப் பதவிக்கான தேர்தலில் இலங்கை உலக நாடுகளால் தோற் கடிக்கப்பட்ட மையை ஒட்டி அவர் விடுத்த அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கின் றது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் இடம் பெறுவதற்கு இலங்கை அரசு எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது. இச்சபையில் தொடர்ந்து இடம்பெறுவதன் மூலமாகத் தனக்கு சர்வதேச ஆதரவு தொடர்ந்து இருக்கின்றது என்ற பிரசாரத்தை முன்னெடுப் பதற்கு அரசு எடுத்த நடவடிக்கைகள் பலனளிக்காமல் போயுள்ளன. மறுபக்கத் தில் இது எமது மக்கள் கண்காணிப்புக்குழு உட்பட தேசிய சர்வதேச மனித உரிமை அமைப்புக்களுக்கும் மற்றும் இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற செயற்பாட்டிற்கு ஒத்துழைத்து உதவி நல்கிய உலக நாடுகளுக்கும் கிடைத்துள்ள வெற்றியாகும்.

ஐ.நா அமைப்பின் இந்தச் செய்தியைப் புரிந்து கொண்டு இதுவரையில் காணாமல் போனவர்களை விடுவித்து கணக்கு கூறுவதன் மூலம் இலங்கை அரசு தன்னைத்திருத்திக் கொள்ள வேண்டும். இலங்கையில் பாரிய மனித உரிமை மீறல்கள இடம்பெறுகின்றன என்பது இன்று உலகப் பிரசித்தமாகிவிட்டது. சீருடையிலும் சீருடை இல்லாமலும் நபர்கள் தமிழர்களைப் பலாத்காரமாகக் கடத்திச் செல்வது வாடிக்கையாகிவிட்டது. தமிழர்களைத் தெரு நாய்களைப் போல் இழுத்துச் செல்லாதீர்கள் என்று நாம் சொன்னால், காணாமல் போயுள்ளவர்களை விடுவியுங்கள என்றும் நாம் சொன்னால், இதுவரை சட்ட விரோதமாகக் கொல்லப்பட்டவர்களுக்கு கணக்குக் கூறுங்கள் என்று நாம் சொன்னால், கப்பம், கடத்தல் ஆகிய சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட செல்வாக்கு மிக்கவர்களை சட்டத்திற்கு முன்னால் நிறுத்துங்கள் என்று நாம் சொன்னால், ஆளுவோருக்குப் புரிவதில்லை. ஆளுவோருக்கு, துதிபாடுபவர்களுக்கும் இவை பற்றிப் புரிந்தும் உறைப்பதில்லை.

இந்நிலையில் வெறுமனே ஆணைக் குழுக்களையும் சபைகளையும் அமைத்து முறையீடு செய்வதற்கான தொலைபேசி இலக்கங்களையும், பாதிக்கப்பட்டோர் பெயர்ப் பட்டியலை யும் வெளியிட்டு உலகை ஏமாற்றி வரும் நடைமுறைக்கு இன்று முற்றுப்புள்ளி வைக்கப் பட்டுள்ளது. இந்திய முன்னாள் தலைமை நீதியரசர் பகவதியின் தலைமையிலான விற்பன்னர் குழுவின் வெளியேற்றத்துடன் இலங்கை அரசின் உண்மைச் சொரூபம் அம்பலத்துக்கு வரத்தொடங்கியுள்ளது. எனவே சர்வதேசத்தின் இந்த எச்சரிக்கையைப்புரிந்து கொண்டு நடப்பதற்கு இலங்கை அரசு இனிமேலும் தவறுமானால் இன்னமும் எடுக்கப்படக் கூடிய தொடர் நடவடிக்கைகளுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியிருக்கும். சர்தேச சமூகத்தின் பிரதிநிதிகளைப் பயங்கரவாதிகள் என்றும் முட்டாள்கள் என்றும் அடையாளம் காட்டியவர்கள் இன்றைய நிலைமைக்கு முற்றுமுழுதாகப் பொறுப்பேற்க வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-5)

---

## ஜப்பான் குழு வழங்கிய உதவிகள் ஜே.வி.பிக்கு இனி இல்லை

(கொழும்பு)

ஜே.வி.பியின் அரசியல் நடவடிக்கைகளுக்காக ஜப்பான் குழுவினால் வழங்கப்பட்டு வந்த உதவிகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத்தெரியவருகிறது.

விமல் வீரவன்ச தலைமையிலான ஜே.என்.பிக்கு இனிமேல் நிதியுதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளதாக அந்த அமைப்பு அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

ஜப்பான் குழுவின் பிரதான அமைப்பாளர் சமன் பிரியங்கரவினால் எழுத்து மூலம் இந்த உறுதி மொழி ஜே.என். பிக்கு வழங்கப்பட்டுள்ளது. ஜே.வி.பி. யிலிருந்து விமல் வீரவன்ச நீக்கப்பட்டமை மற்றும் தமது அமைப்பினால் வழங்கப்படும் நிதியுதவி குறித்து எதுவும் தெரியாதென ஜே.வி.பி. தெரிவித்துள்ளமை போன்ற சம்பவங்கள் மிகவும் வேதனையளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பிக்குள் ஏற்பட்ட உட்கட்சிப் பூசலை சுமுகமான முறையில் தீர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அதற்கு மாறாகக் கட்சித் தலைமை கடுமையான போக்கை பின்பற்றியதாகவும் அவர் குற்றம் சாட்டுகின்றார்.

தலைமைத்துவத்தில் காணப்படும் குறைபாடுகளினால் ஜே.வி.பி. பாரிய பின்னடைவைச் சந்திக்கும் எனவும் புதிய அரசியல் பிரவாகமொன்றின் தேவைப்பாடு விஞ்சி நிற்பதாகவும் ஜப்பான் குழுவின் பிரதான அமைப்பாளர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-5)

---

ஓலைச் சுவடிகள் 32

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### பாவம் மனிதத் தன்மை மன்னிப்பு தெய்வத்தன்மை

'மயாதரித்ரி' என்பதுவே உற்ற வாக்கியம். எப்பேற்பட்ட துன்புறுத்து தலையும் சகிக்கும் தன்மையுடன் ஏற்றுக் கொள்ளவும் மன்னிக்கவும் தயாராகும் தன்மை மாபெரும் மதிப்புள்ள சொத்து என்பதே இவ்வாக்கியம் கூறுகின்றது. மனித வம்சத்தின் விடுதலைக்காக அவதரித்த இறைமகன் இயேசு நாதர் சிலுவையில் துன்பமும் மரணமும் அனுபவித்துக் கொண்டிருக்கும் போதும் தன்னைத் துன்புறுத்தும் பாவிகளை மன்னிக்குமாறு பிதாவினிடம் வேண்டிக் கொண்டிருந்தார். பாவம் மனிதத் தன்மை; மன்னிப்பு தெய்வத்தன்மை என்றே ஆசாரியர் கூறியுள்ளனர். பொறுமையுடனும் விடா முயற்சியுடனும் செயற்படும் போது மனிதன் வானளாவிய மலைச் சிகரங்களையும் காலடிக்கு வரவழைக்கலாம். எந்த சூழ் நிலையிலும் கோபம் கொள்ளாமல் மன்னிக்கும் திறன் இருப்பது மிக கௌரவமான தன்மையே. தவறுகளை மன்னிக்கின்றவன் மனதாலும் உடலாலும் பெரும்சாதனைகளைக் கண்டடையலாம் என்பது முன்னோர் பலருடைய அனுபவம்.

பிறருக்கு மன்னிப்பளிக்க ஒருவர் பெற்றிருக்கும் திறனும் அது அவருடைய உடல் நிலையில் உருவாக்கும் மாற்றங்களும் வயதுக்கேற்றவாறு வேறுபட்டிருக்கும் என்று சில கண்டுபிடிப்புகள் விளக்குகின்றன. மன்னிப்பளித்தல் என்பது பல கோணங்களில் பயனளிக்கும்ஒன்று எனஅமெரிக்காவிலுள்ள மிக்சிகன் பல்கலைக் கழகத்திலுள்ள டாக்டர் லாரன் எல். டாசன்ட் சுட்டிக்காட்டியிருக்கிறார். வயது நிறைந்த 1400நபர்களில் 5மாதங்கள் நடத்திய ஆராய்ச்சியில் மன்னிப்பளித்தலும் உடல் நிலையும் எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கின்றன என்பதைக் கண்டறிந்தனர். பொதுவாக 18க்கும் 44க்கும் இடைப்பட்ட மத்திய வயதினர்கள் வயதானவர்களுடன் ஒப்பிடும் போது மன்னிப்பளிக்கத் தயங்குவதாகத் தெரியவந்துள்ளது. இனிமேலாவது முன் கோபத்தைக் கட்டுப்படுத்தி மன்னிப்பளிக்க முன் வருவோம்.

மாநகர சபை, யாழ்ப்பாணம்



## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவியில் திடீர் மாற்றம்

(கொழும்பு)

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவியில் திடீர் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

மக்கள் தொடர்பாடல் மையத்தின் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ரஞ்சித் குணசேகர பொலிஸ் ஊடகப் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் துறையில் ஐந்தாவது ஊடகப் பேச்சாளராக ரஞ்சித் குண்சேகர பதவி ஏற்றுள்ளார். கல்கமுவ , மகரகம,பொல்காவெல மஹவ, வத்தளை, ஹோமாகம ஆகிய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரியாக குணசேகர கடமையாற்றியுள்ளார்.

இவர் 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் சூடானில் அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# மட்டக்களப்பில் பதற்றம் தணிவு; வழமை நிலை தொடர்ந்தும் பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி மற்றும் ஆரையம்பதி பிரதேசங்களில் உருவான பதற்றநிலை தணிந்து, தற்போது அமைதி நிலவுகின்ற போதிலும் அங்கு வழமை நிலை தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரதேசங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த 2 பேரும் 3 முஸ்லிம்களுமாக 5 பேர் கொல்லப்பட்டதையடுத்தே அமைதியற்ற சூழ்நிலை தோன்றியது.

கடந்த 30 மணித்தியாலங்களில் இந்தப் பிரதேசங்களில் குறிப்பிடத்தக்க வன்முறைகளோ அசம்பாவிதங்களோ இடம்பெறவில்லை என நேற்று மதியம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் மட்டக்களப்பு நகரில் வர்த்தக நிலையம் ஒன்றுக்கு வியாழன் இரவு தீ வைக்கப்பட்டுள்ளது. காத்தான்குடி மற்றும் ஆரையம்பதி பிரதேசங்களில் பாடசாலைகள், அரச காரியாலயங்கள் இயங்கவில்லை.

உள்ளூர்ப் போக்குவரத்துச் சேவைகள் தடைப்பட்டுள்ளதால் வழமை நிலை தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளது. இதே நிலை மட்டக்களப்பு நகரிலும் காணப்படுகின்றது.

இதனிடையில் மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்(பிள்ளையான்) நேற்று இந்தப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்து நிலைமையை வழமைக்குக் கொண்டு வருவது தொடர் பாகப் பொதுமக்கள் உட்பட பலரையும் சந்தித்து உரையாடினார். (எ-1)

## வவுனியா மணிபுரத்தில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா மணிபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.சுட்டுக்கொல்லப்பட்டவர் பழனியாண்டி பெரியண்ணன்(வயது-60) என தெரிவிக்கப்படுகின்றது.

இவர் தனது வீட்டில் இருந்த வேளையில் அங்கு வந்த அடையாளம் தெரியாதவர்கள் அவரை வெளியில் அழைத்துச் சென்று அவர் மீது துப்பாக்கிச் பிரயோகம் மேற்கொண்டு விட்டு தப்பிச்சென்றுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவரது சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பின்னர் வவனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.(எ-1)




த நேசன் பத்திரிகையின் பிரதி ஆசிரியர் கீத் நொயர் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊடக அமைப்புக்கள் மேற்கொண்ட போராட்டத்தில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்களைப் படத்தில் காணலாம்.

# க.பொ.த.(சா/த) பெறுபேற்றில் யாழ்ப்பாணம் மூன்றாம் இடம்

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறு பகுப்பாய்வின்படி வட மாகாணத்தில் வவுனியா கல்வி வலயம் 62 சதவீத சித்திகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இப் பகுப்பாய்வின் அடிப்படையில் மன்னார் கல்வி வலயம் 61வீத சித்திகளைப் பெற்று 2 ஆம் இடத்திலும் யாழ்ப்பாணம் கல்வி வலயம் 60 வீத சித்திகளைப் பெற்று 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளன.

அண்மையில் வெளியான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறு தொடர்பான பகுப்பாய்வு ஒன்று நேற்றுக் கல்வி அமைச்சில் இடம்பெற்றது.

இந் நிகழ்வு கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த, பிரதிக் கல்வி அமைச்சர் சச்சிதானந்தன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது. பரீட்சைகள் ஆணையாளர்கள், கல்விச் செயலாளர்கள், மாகாண கல்வி அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர். (ச-5)

# கிளைமோர்த் தாக்குதலுக்கும் இராணுவத்திற்கும் தொடர்பில்லை

## ஊடக மத்திய நிலையம் அறிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் பிரதேசமான வன்னிப் பகுதியில் 24 மணி நேரத்தினுள் இடம்பெற்ற இரண்டு வெவ்வேறு கிளைமோர்க் கண்ணிவெடித் தாக்குதல்களை இராணுவத்தின் ஆழஊடுருவும் அணியினரே நடத்தியுள்ளதாக விடுதலைப்புலிகள், இராணுவத்தின் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டினைத் தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம் மறுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த நிலையம்நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், விடுதலைப் புலிகளின் இந்தக் குற்றச்சாட்டு இராணுவத்தினருக்கு இழுக்கு ஏற்படுத்தும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற பொய்ப் பிரசாரம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சுண்டிக்குளம் பகுதியில் விடுதலைப்புலிகள் தமது படகுகளை மறைத்து வைக்கும் நிலை ஒன்றின் மீது விமானப் படையினர் நேற்று பிற்பகல் குண்டு வீசி அந்த நிலையத்தை அழித்துள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (ச-5)

## விடுதலைப்புலிகள் ஆதரவாளர்களுக்கு பிரித்தானிய நீதிமன்றம் பிணை வழங்கியது

பிரிட்டனில் தடை செய்யப்பட்ட இயக்கமான விடுத்லைப்புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டதாகக் கைது செய்யப்பட்ட ஆதரவாளர்கள் 4 பேரை பிரிட்டனின் ஓல்ட் பெய்லி நீதிமன்றம்நேற்றுபிணையில்விடுவித்துள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்ட நால்வரும் வாண்ட்ஸ்வொர்த் சிறையிலிருந்தபடியே வீடியோ தொடர்பு மூலம் நீதிமன்ற விசாரணைகளை அவதானித்தார்கள்.

அவர்களில் ஒருவரான அருணாசலம் கிருஷாந்தகுமார் என்ற சாந்தன் மீது, விடுதலைப்புலிகள் அமைப்புக்கு ஆதரவு திரட்ட கூட்டங்களை ஒழுங்கு செய்தார் என்று ஏற்கனவே வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டனிலுள்ள விடுதலைப்புலிகள் அமைப்புப் பிரிவின் தலைவர் சாந்தன் என்று வர்ணித்து ஆயுதங்கள் மற்றும் குண்டு தயாரித்தல் ஆகியவற்றிக்கு வேண்டிய பயங்கரவாதத் தளபாடங்களைத் திரட்டிய மிக முக்கியமான நபர் அவர் என்றும் அரசு தரப்புக் கூறியிருக்கின்றது.

சாந்தனுக்கு பெரியளவு பிணைத் தொகையுடனான பிணை வழங்கப்பட்டுள்ளது. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பல ஆண்டு காலமாக வாங்கியதாகக் கூறப்படும் பல்பேறு கருவிகள் பட்டியலை அரசு தரப்பு வழக்கறிஞர் நீதிபதியிடம் கொடுத்தார். (எ-1)

### பிரபாகரனை...

பட்டுள்ளனர்.

இதில் இருவர் மாத்திரமே நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். இந்த நிலையில் எதிர்வரும் ஜுலை மாதம் 2 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்த நீதிபதி,

அழைப்பாணை விடுக்கப்பட்டவர்களை நீதிமன்றத்தில் பிரசன்னப்படுத்த நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

### மல்லாவியில்...

துணுக்காய் வீதியில் நேற்று முன்தினம் இரவு 5 மணியளவில் இக்கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் அம்புலன்ஸில் சென்ற பொதுமக்களான யோசப் யூலியன் மற்றும் யோசப் சாந்தகும்ார் ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர். (எ-5)

### விமானத்...

லதாக்சுமி (வயது 28) மற்றும் சரிஸ் கவிநிலவன் ஆகியோர் காயம டைந்துள்ளனர். வடமராட்சி கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்து கற்பாடில் வாழ்ந்து வந்தவர்களே இத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.(எ-5)

### அம்பாறையில்...

இலக்குவைத்து நேற்றுக் காலை 6.30மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த படைத்தரப்பைச் சேர்ந்தவர் அம்பாறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளர். தாக்குதலை அடுத்து அப்பகுதியில் பெரும் தேடுதல் நடவடிக்கையை படையினர் மேற்கொண்டனர். (ச-5)

### வவுனியா...

முதன்மை நிலையில் இருந்து செயற்பட்டு விடுதலைப்புலிகளின் இராணுவ வெற்றிகள் பலவற்றிற்குப் பால்ராஜ் ஆதாரமாகத் திகழ்ந்தவர் என புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகள் மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் பால்ராஜின் செயற்பாடுகள் குறித்து புகழாரம் சூட்டிச் செய் திகள் வெளியிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-5)

### பிரதித்...

கான இலங்கைத் தூதுவர் தயான் ஜெயதிலக்கவே இலங்கை சார்பாக பிரதித் தலைமைப் பொறுப்பை வகித்து வருகின்றார்.

எதிர்வரும் ஜுன் மாதம் முதலாம் திகதியிலிருந்து அவர் அப் பொறுப்பிலிருந்து நீக்கப் படவுள்ளார். இலங்கை மனித உரிமைகள் சபையில் அங்கத்துவத்தைப் பெற்றிருந்தால் பிரதித் தலைமைப் பொறுப்புக்கான நீடிப்பைப் பெற்றிருக்கலாம் என்று அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-1)

### முறிகண்டியில் கிளைமோர்த்...

கிளிநொச்சி முறிகண்டிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினர் நடாத்திய கிளைமோர்த் தாக்குதலில் 16 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

படுகொலை செய்யப்பட்டுள்ளோரில் 4 குழந்தைகள், 3 ஆண்கள், 9 பெண்கள் அடங்குவர். கிளிநொச்சி இரணைமடுச் சந்தியைச் சேர்ந்த மக்கள் முழங்காவிலுக்குச் சென்று விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த போது படையினரின் ஆழஊடுருவும் அணியினர் இக் கிளைமோர்த் தாக்குதலை நடத்தினர்.

ஹயஸ் வாகனத்தில் அவர்கள் சென்று திரும்பிக் கொண்டிருந்தபோது நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. முறிகண்டி கோவிலிலிருந்து அக்கராயன் வீதியில் 2 கிலோமீற்றர் தொலைவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திலேயே 16 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மூன்று சிறுவர்கள் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைப் பயங்கரவாத அமைப்பே திட்டமிட்டு அப்பாவிப் பொதுமக்களைப் படுகொலை செய்யும் வகையில் இத்தாக்குதலை நடத்தியுள்ளது. ஐந்து பிள்ளைகளின் தாயாரான பன்னீர்ச்செல்வம் அழகுராணி (வயது-45), சாமிக்கண்டு கறுப்பையா, கறுப்பையா உங்கா,

வாகன ஓட்டுநரான கணேஷ் தனராஜா (வயது-34),செல்வராஜா கமலாதேவி (வயது-34), சுப்பிரமணியம் தனலட்சுமி (வயது-54), அழகன் சுப்பிரமணியம் (வயது-40), சுப்பிரமணியம் சரஸ்வதி (வயது-40), பெரியசாமி விஜி, விஜி லக்ஷிகா (வயது-18), விஜி நந்தா, விஜி தனு (வயது-09), விஜி விதுர்ஷன் (வயது-07),

இராசேந்திரம் கலாவல்லி (வயது-29), சந்திரமோகன் கார்த்திகா (வயது-10), சந்திரகேசரம் கீர்த்திகா ஆகியோர் படுகொலை செய்யப்பட்டவர்கள் ஆவர்.

இதேவேளை இத் தாக்குதலுக்கும் தமக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார். (எ-5)

### பிள்ளையான் குழுவின் ஆயுதங்...

யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து நாம் விலகிய சந்தர்ப்பத்தில் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்குத் தெரிவித்தோம்.

நாம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகியமை பேச்சுமூலமான அரசியல் தீர்வை அடைவதற்கான எமது பயணத்திற்குத் தடையாக இருக்காது என்பதை இச் சந்தர்ப்பத்தில் நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகின்றேன்.

இன்றைய கிழக்கு மாகாணத் தேர்தல் முடிபு நீண்ட காலமாகத் துன்பப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் பாரிய அபிவிருத்திகளை முன்னெடுக்கும் நடவடிக்கைக்குப் பக்க பலமாக அமைகின்றது.

இத் தேர்தல் முடிபு புலிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்கும் அரசின் முயற்சியில் முக்கிய மைல் கல்லாக அமைகின்றது.

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட பிள்ளையான் குழு, இத் தேர்தல் மூலம் ஜனநாயக நீரோட்டத்திற்கு திரும்ப வழி சமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதில் வெற்றி பெற்று பிள்ளையானே முதலமைச்சராகவும் தெரிவாகியுள்ளார்.

அதேவேளை தேர்தலுக்கு முன்பிருந்தே பிள்ளையான் குழுவின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்று கோரிக்கை விடப்படுகின்றது. பிள்ளையான் குழுவின் ஆயுதங்களைக் களைய அரசு தயாராகவேயுள்ளது.

ஆனால் அதற்கான நேரம் இதுவல்ல. அதற்குச் சற்று கால அவகாசம் தேவைப்படுகின்றது என்றார். (எ-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.05.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.